தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

ஆடி - 2025

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி
**கலை இலக்கிய இதழ்**

ஆடி - 2025

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

யாவரும் நலமா?

காற்றுவெளி இதழின் ஆடி இதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது.

படைப்பாளர்களுக்கு எமது நன்றி.

காற்றுவெளி பல சிறப்பிதழ்களை தந்திருந்தமை தாங்கள் அறிந்ததே.தொடந்து இங்கிலாந்து படைப்பாளர்களின் சிறுகதைகள் அடங்கிய சிறப்பிதழைக் கொண்டுவரவுள்ளது.ஆகவே இங்கிலாந்திலுள்ள நமது படைப்பாளர்கள் சிறுகதைகளை(4 பக்கங்கள் /யூனிக்கோட் எழுத்துரு /எழுத்துப்பிழைகளின்றி)அனுப்புங்கள்.

இதழ் அச்சில் வெளிவரும்.

உலகின் பல பாகங்களிலும் நோய்களின் அச்சுறுத்தல்,யுத்தமேகங்களின் பீதி தொடர்கின்றன.

மக்களின் துன்பங்களுக்கு,இறப்புக்களுக்கு நீதி கோரி கடவுளர்களைத் தவிர யாரிடம் போய் வேண்டுதல் செய்யமுடியும்.முள்ளிவாய்க்கால் அவலம் பல துயரங்களை சுமந்து வந்தவர்கள் நாங்கள் ஆதலால் போர் அவலங்கள் பற்றி அறிவோம்.யாரும் சிந்திப்பதாயில்லை என்பதே சோகம்.

இன்னும் பிரார்த்திப்போம்.

நட்புடன்,

**சோபா**

01/07/2025

# படைப்பாளர்கள்

**கவிதைகள்**

*1.* கவிச்சுடர் சிவரமணி
*2.* ஜமீல்
*3.* இனியவன்காளிதாஸ்
*4.* மலர்மகள்
*5.* கி.கவியரசன்
*6.* த. ரவீந்திரன்
*7.* பாவலர் கருமலைத்தமிழாழன்
*8.* DR ஜலீலா முஸம்மில்
*9.* ரோஷான் ஏ.ஜிப்ரி
*10.* சே கார்கவி கார்த்திக்
*11.* ஆலங்குடி,வெ.தமிழ்க்கனல்
*12.* மீ.யூசுப் ஜாகிர், வந்தவாசி
*13.* நந்தவனம் சந்திரசேகரன்
*14.* கண்ணன் விஸ்வகாந்தி
*15.* இரா. மதிராஜ்
*16.* இரா.சீ.பாலகுமார்.M.A
*17.* ரஜிதா அரிச்சந்திரன்
*18.* திருமதி சாந்தி சரவணன்
*19.* நிவேதிகா பொன்னுச்சாமி
*20.* ஐ.தர்மசிங்
*21.* அ. அமுல்ராஜ்
*22.* அன்பாதவன்
*23.* பாக்யபாரதி
*24.* கவிஜி
*25.* ரகுநாத் வ

**சிறுகதைகள்**

*1.* சியாமளா யோகேஸ்வரன்(அவுஸ்திரேலியா)
*2.* திக்குவல்லை கமால் (இலங்கை)
*3.* நீலம்மூன்
*4.* சிவசங்கரி குருநாதன்
*5.* நெல்லை அன்புடன் ஆனந்தி(அமெரிக்கா)
*6.* டீன் கபூர்(இலங்கை)
*7.* கமலினிகதிர்- சுவிற்சர்லாந்து
*8.* ஜூனியர் தேஜ்

**கட்டுரைகள்**


*1.* திரு.சமயக்கண்ணு, மதுரை
*2.* முனைவர் சு.சோமசுந்தரி, புதூர்
*3.* புல்மோட்டையூரான்

# போராட்டம்

சியாமளா யோகேஸ்வரன், அவுஸ்திரேலியா

**"டிங்"** அலைபேசியில் குறுஞ்செய்தி ஒன்று வந்திருப்பதாக அறிவித்த ஒலியில் மஞ்சரியின் நினைவுகள் கலைந்தன.

'முடிந்தால் என்னைத் தொலைத்துத்தான் பாரேன்' என்று சவால் விடுவது போன்று கறுப்பு வண்ணத்தில் கம்பீரமாக உட்கார்ந்திருந்த அலைபேசி மஞ்சரியின் இதயத்துடிப்பைப் அசுரவேகத்தில் எகிற வைத்தது. 'இப்போது என்ன வந்திருக்கும்?' எண்ணம் அச்சத்தைக் கொடுக்க மஞ்சரியின் உடல் நடுங்கியது. ஜென்ம ஜென்மமாகத் தொடரும் கொடும் பகையின் வடிவமொன்று, அவளது படுக்கையறையில், அவளருகில் கொலைவெறியுடன் உட்கார்ந்திருப்பது போன்றிருந்தது.



‘தொலைபேசி வாங்கித் தர மாட்டோம் என்று சொல்லிக் கொண்டிருந்த பெற்றோர் மஞ்சரி உயர்தரப் பாடசாலைக்குப் போகிறாள் என்றதும் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டார்கள். பதின்மூன்று வயதைத் தொட்ட அன்று பிறந்த நாள் பரிசாகப் போனைப் பரிசளித்த போது, மஞ்சரி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவிருக்கவில்லை. போனைக் கண்டபடி பாவிக்கக் கூடாது என்ற பெற்றோரின் நிபந்தனைக்குத் தலையாட்டியவள், தனது அறைக்குப் போனதுமே போனில் இருக்கக்கூடிய அத்தனை மென்பொருட்களினதும் பயன்பாட்டைப் பரிசோதிக்கத் தொடங்கி விட்டாள்.

தொலைபேசிப் பாவனை சம்பந்தமாக நண்பிகள் கற்றுக் கொடுத்தவற்றை எல்லாம் முயற்சி செய்து பார்த்தாள். தொழினுட்பத்தின் வளர்ச்சியும் அதன் பயனும் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தன. நண்பி ஒருத்தி பக்கத்திலிருப்பது போன்ற உணர்வைத் தொலைபேசி கொடுத்ததையும், நேரம் செல்வது தெரியாமலேயே கழியும் பொழுதையும் அனுபவிக்கத் தொடங்கினாள். அத்துடன் புலனத்தின் பல்வேறு குழுக்களிலும் அவளது பெயர் இணைந்து கொண்டது.

உயர்தரப்பாடசாலைக்குச் சென்ற போது ஆரம்பப்பாடசாலையில் கற்ற நண்பிகள் யாரும் இருக்கவில்லை. மஞ்சரி படிப்பில் சாதாரணம் என்ற போதிலும் நீச்சலிலும், வலைப்பந்தாட்டத்திலும் சிறந்து விளங்கினாள். இவளைப் போன்றே சிறப்பாக விளையாடக் கூடிய வியட்னாமைச் சேர்ந்த லின் அவளுக்கு உற்ற நண்பியானாள். மற்றவர்களை நோகடிக்காமல் மென்மையாகப் பேசிப் பழகும் லின் விளையாட்டு என்று வந்து விட்டால் வேறு விதமாகத் தெரிவாள். அதிரடியாக விளையாடுவாள்.

வலைப்பந்துக் குழுவுக்கு லின் தலைவியாகவும் மஞ்சரி உபதலைவியாகவும் இருந்ததுடன் ஒருவரையொருவர் ஊக்குவித்து சிறப்பாக விளையாடினார்கள் மாநில மட்டத்தில் பல பரிசுகளைப் பாடசாலைக்கென வாங்கிக் குவித்ததால் அதிபரினால் மேடையில் அடிக்கடி பாராட்டப்பட்டனர். பிரபலமான அந்தப் பெண்கள் பாடசாலையில் இவர்களைத் தெரியாதவர்கள் யாருமிருக்கவில்லை எனுமளவுக்கு, நண்பிகள் இருவரும் சிறந்த விளையாட்டு வீராங்கனைகளாய் இருந்தனர்.

மஞ்சரியும் லின்னும் விளையாட்டால் மட்டுமல்லாமல் இயல்பிலும் மெலிந்தவர்கள். மஞ்சரி அவள் அப்பாவைப் போன்று கொஞ்சம் கரு நிறத்தவள். லின் அவள் நாட்டுக்கே உரிய நிறத்துடன் பார்க்கப் பளிச்சென்று இருந்தாலும் மிக உயரமானவள் என்பதுடன் தோல் கொண்டு என்பைப் போர்த்தினாற் போன்று மெலியதாகத் தெரிவாள்.

இவர்களுடன் நீச்சல் போட்டிகளில் பங்கு கொள்ளும் றீற்றாவும் இவர்களுடனேயே ஒட்டிக் கொண்டு திரிவாள். அவளுக்கு விதவிதமாகப் படமெடுப்பது என்றால் பிடிக்கும். தன்னை எடுப்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல் இவர்களையும் படமெடுத்துத் தள்ளுவாள்.

அடுத்த நாள் வகுப்புக்குப் போன போது, கூடி பேசிக் கொண்டிருந்த நண்பிகள். மஞ்சரியைக் கண்டதும் ஆர்ப்பாட்டமாக வரவேற்றார்கள். மஞ்சரி என்னவென்று புரியாமல் குழம்பிக் கொண்டிருக்கையில் லின்னும் வந்து சேரந்தாள். குழம்பி நின்றவர்களிடம் றீற்றா விடயத்தைக் காட்டினாள். ‘ரிக்டாக்கில்’ லின்னும், மஞ்சரியும், றீற்றாவும் நீந்தும் போது எடுத்த ஒளிப்பதிவு பாடலுடன் மிக அழகாகத் தொகுக்கப்பட்டிருந்தது. பதிவு குறுகியதாயிருந்தாலும் பார்ப்பதற்கு ஒலிம்பிக் போன்ற பெரிய தளத்தில் விளையாடியது போன்று பிரமாண்டமாகத் தெரியும் வகையில் காட்டப்பட்டிருந்தது. அதற்கு நல்ல விமர்சனங்களும் அதிக லைக்குகளும் கிடைத்திருந்தமை தோழிகள் இருவருக்கும் மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது. விளைவாக மஞ்சரியும் லின்னும் கூட விதவிதமாக ஒளிப்பதிவு செய்யத் தொடங்கினார்கள். அவை நண்பிகளிடம் பிரபல்யமாகத் தொடங்க, படிக்கும் நேரத்தில் கூட, எங்ஙனம் ஒளிப்பதிவை நன்றாக எடுக்கலாம் என்று சிந்தனை ஓடுமளவுக்கு நண்பிகள் இருவரும் மாறி விட்டிருந்தார்கள்.

இறுதித் தவணைப் பரீட்சை வருகின்றது என்றாலும் நீச்சற்பயிற்சியை நண்பிகள் தவற விட்டதில்லை. மஞ்சரி காலை ஏழுமணிக்கே நீச்சல் குளத்துக்குச் சென்று விட்டாள். காலை வெயில் உடலை அளவாக வாட்டிக் கொண்டிருந்தது. நீச்சலுடையை அணிந்திருந்தமையினால் உடலைப் பெரிதாக வெயிலில் இருந்து பாதுகாக்க முடியவில்லை. பயிற்றுவிப்பாளர் வேறு ஒரு குழுவுக்குப் பயிற்றுவிப்பதில் மும்முரமாக இருந்தார். பேச்சுத் துணைக்கு லின்னை இன்னமும் காணவில்லையே என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே தூரத்தே லின் பஸ்சில் இருந்து இறங்குவது தெரிந்தது.

காத்திருக்கப் பொறுமையின்றி லின் வரும் திக்கை நோக்கி மஞ்சரி நடந்தாள். லின்னின் வழமையான துள்ளல் நடையைக் காணவில்லை என்பது அவளைக் கொஞ்சம் சிந்திக்க வைத்தது. ஓடிப்போய் லின்னின் கைகளைப் பிடித்துக் கொண்ட போதும் லின் அமைதியாகவே இருந்தாள்.

“என்னாச்சு லின்? ஏன் என்னமோ போல இருக்கிறாய்?”

“ஒன்றுமில்லை மஞ்சரி” பதிலில் எந்த உயிர்ப்புமிருக்கவில்லை.

கம்பி இருக்கையில் லின்னின் முகத்தை நோக்கியவாறு வசதியாக அமர்ந்து கொண்ட மஞ்சரி, ''என்னமோ சரியில்லை, சொல்லலாம் என்றால் சொல்லு'' என்றதும் லின்னின் கண்கள் கலங்கத் தொடங்கின.

''மஞ்சரி, படிப்பில் நல்ல புள்ளிகளை வாங்கவில்லை என்று நான் இன்றைக்கு வீட்டில் வாங்கிக் கட்டிக் கொண்டேன்.''

''படிக்காவிட்டாலும் பரவாயில்லை என்று உன்னை விளையாட்டில் ஊக்கப்படுத்தும் பெற்றோரா உன்னைத் திட்டினார்கள்.'' மஞ்சரியின் குரலில் நம்பாத தன்மை தெரிந்தது.

''இனி சுவிம்மிங்குக்கோ அல்லது விளையாட்டுக்கோ கூடப் போக வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள்.''

சொன்ன லின்னைக் கவலையுடன் பார்த்த மஞ்சரிக்கு மேற்கொண்டு பேச்சு வரவில்லை.

மௌனமாயிருந்த லின் தானாகவே பேச்சைத் தொடர்ந்தாள்.

''யாரோ நாங்கள் எடுத்துப் போட்ட வீடியோக்கள் பற்றி வீட்டில் சொல்லியிருக்கின்றார்கள் அதுதான்.'' மஞ்சரிக்குத் திக்கென்றிருந்தது. பள்ளிக்கு வெளியில் போக வாய்ப்பில்லை என்பதால், இத்தனை நாளும் அதைப் பற்றி யோசிக்கவில்லை. இல்லாவிட்டால் பண்பாடு, கலாசாரம் என்று பேசிக் கொண்டிருக்கும் தந்தையார் நீச்சலுடையிலும் குட்டைச் சட்டையிலும் எடுத்த வீடியோக்களைப் பார்த்து விட்டால் பெரும் பிரளயத்தைக் கிளப்புவார் என்பது அப்போது தான் அவளுக்கு உறைத்தது.

''லின், கவலைப்படாதே, இனிமேல் நாங்கள் எந்த வீடியோவும் எடுக்க வேண்டாம், அதை மற்றவர்களுக்கு அனுப்பவும் வேண்டாம். அப்பா அம்மாவுக்கு இனிமேல் எடுக்க மாட்டோம் என்று சொல்லி விளங்கப்படுத்து, இல்லாவிட்டால் நான் வந்து கதைக்கிறன்'' மஞ்சரி லின்னுக்குத் தேறுதல் சொன்னாள். பதினான்கு வயதே ஆன உலகம் புரியாத இரண்டு இளம் பெண்கள் தமது செயலின் பின்விளைவுகளுக்கு முகம் கொடுக்கத் தொடங்கியிருந்த தருணம் அதுதான்.

பயிற்றுவிப்பாளர் கூப்பிடுவது தெரிந்ததும் இருவரும் நீச்சல் தடாகத்துள் மீன் போலப் பாய்ந்தார்கள். ஆனாலும் வழமையான வேகத்துக்கு நீந்த முடியாத அளவுக்கு இருவருமே சிந்தனைகளால் சிக்குண்டிருந்தார்கள். மறுநாள் லின்னின் அழைப்பின் பேரில் அவளது வீட்டுக்குச் சென்றவள், அவளது பெற்றோருக்கு நம்பிக்கை கொடுக்கும் விதமாகப் பேசியதில் அவர்களும் கொஞ்சம் இறங்கி வந்தார்கள்.

அதன் பின்னர் நண்பிகள் இருவரும் தம் தவறை உணர்ந்தவர்களாய் போனில் தம் வீடியோவையும் தரவேற்றுவதைத் தவிர்த்தார்கள். விளையாட்டும் படிப்பும் என்று சுமுகமாய் நண்பிகளின் நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. வீடியோ எடுக்கலாம் எனக் கேட்ட நீற்றாவை முற்றாக மறுத்தார்கள். விடுமுறை நாட்கள் வந்த போது, ஒவ்வொரு நாளும் சந்தித்தார்கள். தொலைபேசியை மறந்து விட்டு நிறையப் பேசினார்கள், பூங்காவைச் சுற்றி நடந்தார்கள். பூங்காவில் பூப்பந்தும், வலைப்பந்தும் விளையாடினார்கள், படம் பார்த்தார்கள். மற்றைய பெற்றோர் தமது பிள்ளைகள் பூட்டிய அறைக்குள் போனுடனேயே இருக்கின்றார்கள் எனக் கவலைப்படும் போது, மஞ்சரியும் லின்னும் தொலைபேசியைத் தள்ளி வைத்து விட்டுத் தமது நேரத்தை ஒன்றாகவே கழித்தார்கள். அந்த விடுமுறை முடிகின்றதே என்று வருத்தம் கொள்ளுமளவுக்கு அவர்களிடையே இருந்த நட்பு இறுகிப் போயிருந்தது.

விடுமுறை முடிந்து வகுப்புக்குச் சென்ற போது, வழமையாகச் சுற்றிக் கொள்ளும் நட்பு வட்டம் கொஞ்சம் ஒதுங்கிக் கொண்டது போலிருந்தாலும் மஞ்சரி அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. லின் அதைப் பற்றிச் சொல்லி வருத்தப்பட்டாள். தமக்குப் பின்னால் எல்லோரும் ஏதோ பேசிச் சிரிக்கின்றார்கள் என்பதை மஞ்சரி கவனித்து விட்டு ஊர்க்குருவி நீற்றாவிடம்தான் காரணத்தைக் கேட்டாள்.

அவள் தயங்கியபடி சொன்ன காரணம் மஞ்சரிக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. இவளது வகுப்புத் தோழி ஒருத்தியினால் இவர்களை விடுத்து ஆரம்பிக்கப்பட்ட தனிக்குழு ஒன்றில் இவர்களது பழைய பதிவுகள் அவ்வப்போது பதிவேற்றம் செய்யப்பட்டு அதற்கான விமர்சனங்கள் பகிரப்படுகின்றன என்றும் இவர்கள் எடுத்த வீடியோக்கள் எல்லாம் பாடசாலைக்கு வெளியிலும் சுற்றி வரத் தொடங்கி விட்டிருந்தன என்றும் சொன்ன போது மஞ்சரிக்குக் கலக்கம் வந்தது. ஆனால் குறை சொல்லுமளவில் எதையும் பதிவேற்றி விடவில்லை என்பதுடன் இப்போது எதுவும் போடுவதில்லைத்தானே என்று ஆறுதற்பட்டுக் கொண்டாள். ஆனால் வீட்டுக்கு வந்த பின்னர் என்னமோ சரியில்லை என்று தோன்றவே நீற்றாவுக்கு அழைப்பெடுத்தாள்.

''நீற்றா, என்னதான் எங்களைச் சுற்றி நடக்குது?''

''ஒன்றுமில்லை மஞ்சு, சும்மா எதையாவது எழுதிக்கொண்டிருக்கின்றார்கள்''

''அப்படியாக எனக்குத் தெரியவில்லை, என்னமோ இருக்குது, உள்ளதைச் சொல்லு'' கேட்கும் போதே உள்ளுக்குள் நடுங்கியது.

''உண்மையில் ஒன்றுமில்லை, சும்மா குப்பையான

விமர்சனங்கள் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நான் பிறகு கதைக்கின்றேன்" றீற்றா சொல்லி விட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்க, மஞ்சரி அவசரமாகத் தடுத்தாள்.

"றீற்றா பிளீஸ், எனக்கு அவற்றில் ஒன்றைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?"

றீற்றா நிறையத் தயக்கத்தின் பின்னர் அனுப்பிய வீடியோவும் அதற்கான விமர்சனங்களும் மஞ்சரியைத் துவண்டு போக வைத்தன.

மஞ்சரியினதும், லின்னுடையதும் உடலமைப்புகள் படு கேவலமான வார்த்தைகளால் விபரிக்கப்பட்டிருந்தன. யாரனுப்பியது என்று பார்த்த போது தெரியாத ஒரு பெயருடையவரிடம் இருந்தே வந்திருந்தது.

அன்று பூராவும் மஞ்சரிக்கு எதுவும் ஓடவில்லை. தனக்குள் முடங்கிப் போயிருந்தவளைத் துருவித் துருவிப் பெற்றோர் விசாரித்த போது, ஒன்றுமில்லை என்று மஞ்சரி மழுப்பினாள். சாப்பிடக் கூட வெளியில் வராமல் தலையிடி என்ற பெயரில் அறைக்குள் முடங்கிக் கொண்டாள். பார்த்த ஒரே ஒரு பதிவு தன்னை இப்படி முடங்க வைக்கின்றது என்றால் விடுமுறை பூராவும் இதையே வேலையென்று எதையெல்லாம் அனுப்பியிருப்பார்கள் என்ற சிந்தனையோடு, அனிச்சை போன்ற மிக மெல்லிய மனம் கொண்ட லின் எப்படித் தாங்கப் போகின்றாள் என்றே எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. போனைப் பார்க்கும் போதெல்லாம் அச்சம் வந்தது. அவற்றிலிருந்து மீண்டு உறங்குவதற்கு மஞ்சரி முயற்சித்தாள்.

மறுநாள் லின் பாடசாலைக்கு வரவில்லை. மஞ்சரி அழைப்பெடுத்த போதும் லின் பதிலளிக்கவில்லை. றீற்றா தயங்கியபடி லின்னிடமும் நடந்ததைச் சொன்னதாகவும், லின் வீட்டுக்கு வந்து தன் போனை வாங்கிப் பார்த்ததாகவும் சொல்ல, மஞ்சரி தனக்கும் அந்தப் பதிவுகளைக் காண்பிக்குமாறு கேட்டாள். றீற்றா தயங்கி விட்டுத் தன் போனை மஞ்சரி கையில் கொடுத்து விட்டு விலகிச் சென்று விட்டாள்.

ஒவ்வொரு செய்தியாகப் படிக்கப் படிக்க வேதனையால் கண்ணீர் சொரிய அவமானத்தால் உடல் எரிந்தது.

குச்சிக்கு வட்டத்தலை, என்பால் மட்டுமேயான உடல், ஒன்றுமேயில்லாத மார்பகம், உள்ளுறுப்பால் அழுக்கான ஆடைகள் என்று உறுப்பு உறுப்பாய் பாகம் பிரித்து வட்டம் போட்டு ஆராய்ந்திருந்தார்கள். நீச்சலுடை உடுப்பு அவர்களுக்கு நன்றாக உதவியிருப்பது தெரிந்தது. பெண் என்ற பெயரில் உலவும் ஆண் உருவங்கள் என்றும் பெண்ணினத்துக்கே களங்கம் என்றும் கூறி மஞ்சரியினதும் லின்னினதும் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. அவர்களின் நிறங்கள் விபரிக்கப்பட்டு, உடற்பாகங்கள் மாற்றி ஒட்டப்பட்ட பகுதிகளும் பதியப்பட்டிருந்தன. மஞ்சரிக்கும் லின்னுக்கும் இடையே தப்பான உறவு இருப்பதாகவும் இவர்களுடன் சேர வேண்டாம் என்று பெண்களுக்கும், இவர்களுடன் காதலில் வீழ்ந்து விட வேண்டாம் என்று ஆண்களுக்கும் எச்சரிக்கை வேறு விடுக்கப்பட்டிருந்தது. வாசிக்க வாசிக்க மஞ்சரி சுக்கு நூறாக உடைந்து கொண்டு போய் ஒரு கட்டத்தில் எதையும் வாசிக்கவோ கிரகிக்கவோ முடியாத நிலையில் அப்படியே பித்துப் பிடித்தவள் போல அமர்ந்திருந்தாள். இவளுடன் கூடப் படிப்பவர்கள் தானே? இத்தனை வக்கிரம் இவர்களுக்கு ஏன் வந்தது? இந்த வயதில் இப்படிக் குப்பையாக கற்பனை செய்யவும் எழுதவும் எங்கிருந்து பழகிக் கொண்டார்கள்?

பாடசாலை முடிந்து ஏற்றுமிடத்தில் மஞ்சரியைக் காணாத பெற்றோர்கள், அவளைத் தேடி கண்டு பிடித்த போது அதிர்ந்தே போனார்கள். எதுவும் சொல்லாமல் அழுது கொண்டிருந்தவளின் வாயைப் பிடுங்கிக் கொஞ்சமாய் எடுத்த போதும் அவர்களுக்கு நிலைமையின் விபரீதம் புரியவில்லை. இரவு பத்து மணிக்கு மஞ்சரியின் அம்மாவுக்கு வந்த தொலைபேசி அழைப்புச் செய்தி பெற்றவர்களை நிலை குலைய வைத்தது.

லின் தற்கொலை செய்து கொண்டாள் என்ற செய்தியால், விடயம் என்னமோ விபரீதம் என்று புரிந்து போனதில் தம் மகளை எண்ணி அச்சம் கொண்டார்கள். மஞ்சரிக்கு எதுவும் சொல்ல முடியவில்லை. அவளோடு போய்த் தூங்குவது வழக்கம் இல்லை என்பதால் அவளின் அறைக்கதவைத் திறந்து வைத்து விட்டு இரவு பூராவும் தூங்காமல் காத்திருந்தார்கள். விடியலை எண்ணுகையில் நெஞ்சம் பதைத்தது. உற்ற தோழியின் மரணத்தை மஞ்சரி எப்படி எடுத்துக் கொள்வாளோ என்ற அச்சத்துடன் நிமிடங்கள் யுகங்களாகக் கடந்தன. மஞ்சரி காலை ஏழு மணிக்கு எழுந்து விட்டாள் என்பது புரிய அவர்களின் இதயத்துடிப்பு மேலும் எகிறியது. அறைக்கதவைப் பூட்டியதும் விழுந்தடித்துப் போய் கதவில் இடித்துக் கூப்பிட்டார்கள். மஞ்சரியின் குரல் கோபத்துடன் "குளிக்கின்றேன்" என்று சொல்லப் பெருமூச்சு விட்டார்கள்.

ஐந்து நிமிடத்துள் முகம் வெளிறிப்போய் அழுகையுடன் ஓடிவந்தவளை தந்தை அணைத்துக் கொண்டார்.

"அப்பா.. லின்" பெரிதாக அலறியவளைத் தெரியும் என்பது போல் தந்தையும் தாயும் சேர்த்து அணைத்துக் கொண்டார்கள். நண்பியின் மரண வீட்டில் நின்ற மற்றைய தோழிகளைக் காணப் பிடிக்கவில்லை. இறுதி அஞ்சலியில், நண்பியைப் பற்றிப் பேசுமாறு சொன்ன போது, அவளின் மென்மையான குணத்தையும் அவளுடனான அழகிய தருணங்களையும் பகிர்ந்து கொண்ட போது மேலே பேச முடியாமல் விசும்பியவளைக் கண்ணீருடன் எல்லோரும்

பார்த்தார்கள். சிறந்த குணங்கள் கொண்ட ஒரு நல்ல நண்பியை எல்லோரும் சேர்ந்து அநியாயமாகக் கொன்று விட்டார்கள் என்பது மட்டுமே அவளுள் ஆழமாகப் பதிந்து போயிருந்தது.

பாடசாலை நிர்வாகத்துக்கு எதுவும் செய்ய முடியவில்லை. ஆதாரங்கள் யாவுமே அழிக்கப்பட்டு விட்டன என்பதுடன் பதின்ம வயதுக் குற்றங்களுக்கான தண்டனை கடுமையானதாக இல்லை என்பதும் இன்னொரு காரணமாயிற்று. இது பற்றிக் கடுமையான எச்சரிக்கையுடன் சுற்று நிருபமொன்று மாணவர்களுக்கு அனுப்பப்பட்டது. மஞ்சரிக்கு உளவியல் ஆலோசனையும் வழங்கப்பட்டது. மஞ்சரியை எங்குமே அனுப்பாமல், தனியே விடாமல் காத்த பெற்றோருக்கு எத்தனை நாட்களுக்கு அதைத் தொடர முடியும் என்ற சந்தேகம் வந்த போது மகளுடன் மனம் விட்டுப் பேச முடிவு செய்தார்கள்.

“மஞ்சரி, அடுத்ததாக என்ன செய்யப் போகின்றாயம்மா?”

“இன்னும் ஒரு கிழமை போகட்டும் அம்மா, பள்ளிக்குப் போனால் லின்னின் ஞாபகம் வரும்” மஞ்சரியின் கண்களின் நீர்.

“அந்தப் பள்ளி வேண்டாமம்மா, வேறு ஒரு பள்ளிக்கு மாறுவம். உந்தப் பிள்ளைகள் உன்னையும் நிம்மதியாக இருக்க விடாதுகள்.” அப்பாவின் குரலில் வேதனை.

“ஏனப்பா? நான் என்ன பிழை செய்தனான் ஓடி ஒளியுறதுக்கு? பிழை செய்ததும், திருந்த வேண்டியதும் லின்னைக் கொன்றவர்கள் தான்.” தோழியின் நினைவில் விசும்பியவள் தொடர்ந்தாள்,

“நான் இப்ப ஓடிப் போனால், தண்டனை இல்லாமல் தப்பித்துக் கொண்டவர்களுக்கு இன்னொரு அப்பாவியைத் துன்புறுத்துறதுக்கு துணிச்சல் வரும். நான் லின்னுக்காக என்றாலும் நிமிர்ந்து நிற்க வேணும்.” மஞ்சரியின் குரலில் உறுதி இருந்தது.

“இல்லம்மா, எது எப்ப நடக்கும் என்று தெரியாமல் நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேணும். நீ எங்களுக்கு ஒரே பிள்ளையடா” சுஜாதா அழுதாள்.

“அம்மா, நான் சாக மாட்டன். வீடியோ போட்டதைத் தவிர நாங்கள் ஒரு பிழையும் விடேல்லை. என்னைப் பற்றி நீங்கள் கவலைப் பட வேண்டாம். நான் கொஞ்ச நாளிலை வழமைக்கு வந்துடுவன். என்ர வலியை முடிந்தளவுக்கு மற்றவர்களுக்குச் சொல்லுவன். இப்படியான இன்னொரு இழப்பு இனி நடக்கக் கூடாது” வேதனையுடன் ஆனால் உறுதியான குரலில் சொன்னாள் மஞ்சரி. உள்ளுக்குள் உறைந்திருக்கும் அச்சத்தை மறைத்து மகளுக்காகப் புன்னகை பூக்க மட்டுமே அப்போதைக்கு அந்தப் பெற்றோர்களால் முடிந்தது.

கவிச்சுடர் சிவரமணி,
திருகோணமலை

# வள்ளுவர் கண்ட கடவுள்

தமிழ் மறையாம் திருமறை
தனித்தமிழே
அழகுற
வார்த்தெடுத்த சொற்சிலம்பம்
இருவரியில் சூட்சுமம்

கடைந்தெடுத்த முத்தமிழால்
முத்தாய் கோர்த்திட்டே
வள்ளுவம் தந்த அதிகாரமெல்லாம்
சொத்தான தமிழாலே

அன்புக்கு அணையெதற்கு
அதற்கும் ஆயிரம் பொருளுண்டே
இதனையும் இருவரியில்
கொடுதிட்ட பிரம்மா அவரே

எம் மொழியும் கண்டதில்லை
தமிழ்மொழி போல் சிறப்பொன்றை
தமிழுக்கே சிறப்பு குறளென்றால்
உலகிற்கே எடுத்தியம்பியது வள்ளுவனே

எத்தனையோ கண்டாலும்
எவர் எடுத்தியம்பினும்
வள்ளுவம் கண்ட கடவுள்
வானுயர ஒளிரும் தமிழ்

**ஜமீல்**

# காலத்தின் வரிசையில் எனக்கான இடம் எது

வரிசையினை எங்கு கண்டாலும்
எதுவும் விசாரிக்காமல்
முண்டியடித்து நின்று விடுகிறேன்

வரிசை அந்திவரை நீண்டு
பனிப் பொழியும்
இரவிற்குள்ளும் ஊர்ந்து செல்லும்

பின் நிற்பவர்கள் நெருக்குவதை
காலம் நெருக்குகிறதென்று மட்டுமே
எண்ணத் தோன்றுகிறது

நான் நெருங்கும் போது
எனக்கான இனிப்பு தீர்ந்து விடுகிறது
அல்லது வரிசை குலைகிறது

இவ்வாறு ஒவ்வொரு வரிசையாக
என்னை அலைய விடுகிறது காலம்

நீண்ட வரிசையில்
எறும்பென காத்துக் கிடந்துதான்
எஞ்சியிருக்கும் வாழ்வை
முடிக்க வேண்டியும் உள்ளது

அப்படி சாலைகள் தோறும்
வளர்ந்து கிடக்கின்றன
தொங்கல் அறியா வரிசைகள்

காலத்தின் நீண்ட வரிசையில்
எனக்கான இடம் எப்போது வருமோ

**இனியவன்காளிதாஸ்**

உள்ளக்கிடக்கையில் உருமாறுகிற
மொழிகளில் எழுந்தடங்குகின்றன
ஒரு பாலையும் கானலும்...
உடைந்துபோகாத
மௌனக்குடங்களில் நிரம்பியிருக்கும்
வினாக்களை வாணலியிலிட்டால்
சைடிஷ்ஷாய் மாறும் இரவுணவுக்கு

ஊட்டம் குறைந்த
மின்கலமாய் அவ்வப்போது மின்னி
மறையும் ஐயச் சுடரில் பொதிகின்றன
இருள் தேசத்தின் இரவுடுக்கள்...

செப்பிய சொற்களில்
அடங்காமலில்லை குரோதக்
குருத்துகள் என்றாலும்
எதற்குத்தான் இத்தனை
பெருமழையோ எனச் சொல்லுகிற
உலகில் இதுவெறும் சாரல்தானே
என்றபடிக் கடந்துபோகிறது பிறவிப்
பெருங்கடல்.

# கார்குழலி( சிவசங்கரிகுருநாதன் ) தன்மானம் சிறுகதை ஒரு விமர்சனப்பார்வை

திரு.சமயக்கண்ணு, மதுரை

கார்குழலி அவர்கள் எழுதிய "தன் மானம்" என்ற தரமான... இயல்பான... படிப்போர் உள்ளம் பட்டுனு ஏற்கும் உண்மைக் கருத்தை உறைவிடமாகக் கொண்ட "ஒரு சிறுகதை" என்றால் என்ன? என்பதற்கு இலக்கணமாய் இந்தக் கதையைப் படைத்துள்ளார்.

"தன் மானம்" என் மனதை வருடிய கதை என்றால் மிகை அன்று. அருமைக் கதை.

செல்வம் என்ற விவசாயி வயல் வெளியில் அமர்ந்து இருக்கிறான்.

அவன் எண்ணங்களோ...

தன் மகன் முகிலன் தந்தைக்கு எழுதிய தபாலில் மூழ்கி இருந்தது.

அதாவது இளங்கலைப் படிப்பு முடிந்து விட்ட நிலையில்...

முதுகலைப் படிப்பைப் தொடர பணம் அனுப்பும்படி எழுதப்பட்டு இருந்தது.

செல்வம் மனமோ பணத்திற்கு என்ன செய்வதென்று?அலை மோதியது.

இளங்கலை படிக்க ஏற்கனவே அவனிடம் இருந்த வானம் பார்த்த பூமி ஒரு ஏக்கரை அடமானம் வைத்துப் பற்றாக் குறைக்குத் தன் தங்க மனைவி அணிந்திருந்த தாலிச் செயினையும் விற்றுத் தான் இளங்கலைப் படிப்பு இனிது முடிந்தது...

இப்போது முதுகலைப் படிப்பிற்குப் பணம் வேண்டுமெனில் என்ன செய்வதென்று குழம்பிப் போய் வயல் வெளியில் பார்வையை விரக்தியுடன் செழுத்தினான்.

ஆசிரியர் இந்த இடத்தில்....

ஓர் ஏழ்மை விவசாயியின் மனநிலை....

பணத்தேவையை முன்னிட்டு எப்படிக் கலங்குகிறது என்பதைப் படிப்போர் மனதில் பதிக்கும் விதம் பரவசம் தருகிறது.

ஆம்! எப்படியும் மகன் முகிலனின் முதுகலைப் படிப்புக்கு பணம் தேடியாக வேண்டுமே...பெற்றவனின் பெரும் கடமையாயிற்றே.

பல்வேறு ஆலோசனைக்கிடையே.,..ஒன்றும் ஓடவில்லை.

இறுதியாக அவனுக்குத் தன் பால்ய நண்பன் மனோகரனிடம் சென்று உதவி கேட்டால் என்ன? என்ற எண்ணம் வந்தது. ஏனென்றால் ஒரு சமயம் மனோகரன் அப்பா தொழில் துறையில் தொய்வு ஏற்பட்டு கலங்கி நின்ற போது, செல்வம் தனது ஒரு ஏக்கர் நிலத்தை அடமானம் வைத்து உதவி செய்தான். உதவி பெற்றவர் உரிய நேரத்தில் நில அடமானத்தைத் திருப்பித் தந்து விட்டபோதிலும்..

அந்த உதவியை மனோகரன் என்றும் மறந்ததில்லை...

மாறாக செல்வத்தைப் பார்க்கும் போதெல்லாம் மனோகரன்...அந்த உதவியைச் சொல்லிச் சொல்லி மகிழ்ச்சி அடைவார். "அதற்காக என்ன...? அமையம் சமையத்தில் ஒருவருக்கொருவர் உதவுது தானே உயர் பண்பு" என்று கூறி அந்தப் புகழுரைக்கு முற்றுப்புள்ளி வைப்பார் செல்வம்.

ஆசிரியர் இங்கே ஒன்றை இனிமையாகக் கோடிட்டுக் காட்டுகிறார். அதாவது ஒருவன் பண நெருக்கடியில் இருக்கும் போது அவனது மனம் எதையெதையோ நினைப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இது செல்வத்திற்கு மட்டுமல்ல அனைவருக்கும் ஏற்புடையதை அழகு படக்கூறுகிறார்.

செல்வம் தான் நினைத்த படி பட்டணம் சென்று தனது பால்ய நண்பன் மனோகரனைப் பார்த்து உதவி பெறத் திட்டமிட்டான். வீட்டில் உள்ள சாமி அறையில் உள்ள பெட்டியைத் திறந்து... அதில் மனோகரன் எப்போதோ எழுதிய கடிதத்தைத் தேடி எடுத்து...

அவனது முகவரியை எழுதி தன் பாக்கட்டில் வைத்துக்கொண்டு தன் அன்பு மனையாள் அன்னம்மாவிடமும் பயணவிபரத்தைக் கூறிக்கொண்டு புறப்பட்டான். ஆசிரியர் இங்கே ஒன்றை இனிது பட விளக்குகிறார்.

அதாவது கணவன் வெளியூர் செல்லும்போது... அந்த விபரம் மனையாளுக்கு அவசியம் தெரிந்து இருக்க வேண்டும் என்ற முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டும் விதம் அருமை. வாழ்வில் ஒரு சிலர் இந்த வழக்கத்தைக் கடைப்பிடிப்பது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வம்... பட்டணத்தில் உள்ள மனோகரன் இல்லத்தைத் தேடிக் கண்டுபிடித்தான்.

மனோகரன் தனது பால்ய நண்பன் செல்வத்தைக் கண்டதும் அகமகிழ்ந்தான்.

தன் அன்பு மனைவியை அழைத்து, இங்கே வந்திருப்பது யார் என்று பாரு.... இவன் தான் என் அன்பு நண்பன் செல்வம்... இவனது உதவியில் தான் நான் படித்து இப்படி உயர் நிலைக்கு வந்தேன் என்று புகழ்ந்தான். ஆசிரியர் இங்கு ஒருவர் செய்த நன்றியை எப்போதும் மறக்கக் கூடாது என்று மனோகரன் மூலம் சுட்டிக்காட்டுவது அருமை.

இதைத் தான் லட்சம் தடவைக்கு மேல் கூறியிருக்கிறீர்களே என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிய அவள்...செல்வத்தை நலம் விசாரித்து விட்டு, இருங்கண்ணா நான் போய் ஏதாவது குடிக்கக் கொண்டு வருகிறேன் என்று கூறியபடி சமையல் அறைக்குச் சென்றாள்...

இங்கே ஆசிரியர் விருந்தோம்பல் பற்றி விரிவாக எடுத்துரைக்கிறார்.

வீட்டுக்கு வந்த விருந்தினரோடு அகமகிழ்ந்து உரையாடுதல்... அவர்களுக்குக் குறைந்த பட்சம் ஏதாவது சாப்பிடக் கொடுப்பது போன்ற விருந்தோம்பல் பண்பு முறையை ரொம்பவும் அழகு படக்கூறுகிறார்.

டே செல்வம்... எங்கள் வீட்டு விசேஷங்கள் எத்தனையோ நடந்திருக்கிறது....பிள்ளைகள் காது குத்து மற்றும் மங்கள நிகழ்வுகள் பல நடந்து இருக்கின்றன...அப்போதெல்லாம் வராத நீ இப்போது மட்டும் வந்து இருக்கிறாய்... என்று மனோகரன் கூறியதும், செல்வத்திற்குச் 'சுரீர்' என்று பட்டது.

மனோகரனிடம் உதவி பெரும் பொருட்டு வந்த அவனுக்கு நொடிப்பொழுதில் மனமாற்றம் ஏற்பட்டுவிட்டது. 'ஒரு வார்த்தை வெல்லும்...ஒரு வார்த்தை கொல்லும்' என்பார்களே அதற்கேற்ப, அப்போதெல்லாம் வராத நீ.... இப்போது மட்டும் வந்திருக்கிறாய் என்ற சொல்லின் ஆழம் செல்வத்தை நிலைகுலையச் செய்தது.

எனவே செல்வம் சுதாரித்துக் கொண்டு.....

பட்டணத்தில் படிக்கும் என் மகன் முகிலனைப் பார்க்க வந்தேன்டா... அப்படியே நட்புச் செல்வமாம் உன்னையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று என் மனம் விரும்பியது. அதனால் தான் வந்தேன் என்று பேச்சைத் திசை திருப்பினான்..

ஆம்! ஏழ்மையில் புரண்டாலும், தன்மானத்தில் செல்வம் செல்வம் தான் என்பதை ஆசிரியர் ரொம்பவும் அழகு பட ரத்தினச் சுருக்கமாய்த் தீட்டி இருக்கிறார். வள வள என்று கதையை நீட்டாமல், 'இது ஒரு சிறு கதை' என்பதற்கு இலக்கணமாய்ப் படிப்போர் மனதில் தன் மானத்தைப் பதித்த ஆசிரியர் அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.



# ‘கூப்பன் அரிசி’

திக்குவல்லை கமால் (இலங்கை)

எங்கள் ஊருக்கு அழகு சேர்க்கும் வயற்பரப்பு சூரியகஹவெல, பால்வத்தை, பன்சாலை வரையில் விரிந்து பரந்தது.சிறிய தாமரைத் தடாகமொன்றும் அதனோடு இணைந்துள்ளது.அதனை மருவிச் செல்லும் களிமண் பாதை திக்குவல்லை - பெலியத்தை வீதியைச் சென்றடையும்.

நெல் விதைத்து வளர்ந்து ஒரு பருவத்தை அடையும்போது அழகோ அழகு.கம்பளம் என்றால் என்னவென்று தெரியாத, காணாத எங்களுக்கு, அந்த வயற்பரப்புத்தான் பச்சைக் கம்பளத்தைக் கற்றுத் தந்தது.கொக்குகளையும் புறாக்களையும் அங்குதான் கண்டோம்.

நெல் அறுவடைசெய்து மீண்டும் விதைக்கும் வரை அது எங்களது விளையாட்டு மைதானமாக மாறிவிடும்அநேகமாக 'மட்டபோல்' விளையாட்டுத்தான் அங்கு நட க்கும். கிரிக்கட் போல அதற்கும் விதிமுறைகள் உண்டு.

கடலிருந்தும் கடற்தொழில் செய்யாதது போல, வயலிருந்தும் வயற்தொழில் செய்யாவர்கள்தான் எங்கள் கிராமத்தவர்கள்.குத்தகைக்குக் கொடுத்துவிட்டு ஏதாவது வியாபாரம்தான் பார்ப்பார்கள்.அந்த வயற்பரப்பின் அறுவடை ஊரின் அரிசித் தேவைக்கு தாராளமாகப் போதும்.

வசதி படைத்தவர்கள் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அவர்களுக்கு நெல்லோ அரிசியோ மூடைமூடையாக வந்து சேரும்.சாதாரண மக்களும் அவர்களைவிட வசதி குறைந்தவர்களும் தமது உணவுத் தேவைக்கு வெள்ளை அரிசி, சிவப்பு அரிசி, மில்சாட் போன்றவற்றைத்தான் பயன்படுத்தி வந்தனர். சிவப்புத் தவிட்டரிசியில்தான் நாட்டம் அதிகம்.

அதிலும் ஒரு வசதி என்னவென்றால் அதனை வாராவாரம் வாங்கிக் கொள்வதற்காக கூப்பன் பங்கீட்டு ஒழுங்குமுறை வழக்கில் இருந்தது. பங்கீட்டுக் கடைகளும் இருந்தன. 'கூப்பன் அரிசி ' என்பது ஒரு பேச்சு வழக்கு பியோகமாக மாறிவிட்டது.

இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்ற காலமாதலால் பதுக்கலும் விலையேற்றமும் நடைபெறாமல் எல்லோருக்கும் பகிர்ந்துபோகும் விதமாகவே இந்நடைமுறை வந்ததாகச் சொல்வார்கள்.

1970 களிலும் உணவுத் தட்டுப்பாட்டு நிலையொன்று இலங்கையில் உருவாகியது.அப்போதும் இந்த ஒழுங்கு காணப்பட்டது.தொடர்ச்சியாக வந்ததா? இடைநின்று மீண்டும் புகுந்ததா என்று தெரியவில்லை.1977ல் ஆட்சி மாற்றமும் திறந்த பொருளாதாரமும் வந்ததைத் தொடர்ந்து சம்பா, முத்துச் சம்மபா, கீரிச்சம்பா என்றெல்லாம்

அரிசி வகைகள் வந்து குவிந்தன.தேசிய விவசாயத்திலும் படுவீழ்ச்சு ஏற்பட ஆரம்பித்தது.

கூப்பன்முறை இருந்த காலத்தில் வாராந்தம் அரிசி உள்ளிட்ட பொருட்களை எப்படிப் வாங்கிக் கொள்வதென்பதிலும் அதற்கான பணத்தைச் சேகரிப்பதிலும் சனங்கள் மிகுந்த அக்கறையுடன் காணப்பட்டனர்.

இக்கட்டான காலகட்டங்களில் தங்கள் கூப்பன்களை விற்று காசு தேடிக் கொள்ளும்நிலை மெல்லமெல்லத் தலைகாட்டியது.வசதி உள்ளவர்களுக்கும் இந்தக் கூப்பன் சலுகை கிட்டாமலில்லை.தங்களது வீட்டு வேலைகளைச் செய்துகொண்டு கூப்பன் துண்டுகளைக் கொடுத்து ஏமாற்றவும் அவர்கள் தயங்கவில்லை.

இன்னும் சிலர் கூப்பன்களை அடகுவைத்து பணம் கொடுப்பதை ஒரு தொழிலாகவே செய்ய ஆரம்பித்தனர். இப்படிப் பலதும் நடந்தேறின.

சின்ன வயதில் இந்தக் கூப்பன் அரிசி கொண்டுவர என்னையும் எனது மூத்த சகோதரனையும்தான் மாறிமாறி அனுப்புவார்கள்.அப்போது எங்கள் வீட்டில் நாலைந்து பேர் இருந்ததால் சுமையும் கொஞ்சம்கூடத்தான்.

இந்த கோபரேட் கடையில்தான் முதன்முதலாக ஒரு வித்தியாசமான தராசியைப் பார்த்தேன்.அதற்குமுன் கண்டவற்றில் இரண்டு தட்டும் ஒரேமாதிரி இருந்தன. இங்கு படிகள் வைக்கும் தட்டு சிறிதாகவும் அரசிபோடும் பக்கம் பெரிதாகவும் வேறொரு வடிவத்திலும் இருந்தது. அது மட்டுமன்றி நிறுத்த அரிசியை, உரியவரின் பையில் பின்பக்க கைப்பிடியை உயர்த்திப் போடும்போது அரிசி மணிகள் "ஸ்ஸ்" என்ற சத்தத்துடன் வேகமாக விழும். இந்தக் காட்சியை ரசிப்பதற்காக பின்னால் வருவோருக்கு இடம்விட்டு மெல்ல மெல்லப் பின்தள்ளி நிற்பேன்.


இப்படி நேரத்தைக் கடத்திவிட்டு வீட்டில் ஏச்சுப்பட்ட சந்தர்ப்பங்கள் நிறைய உண்டு.அரசிப் பையை வீட்டுக்குக் கொண்டு போவதோடு எங்கள்கடமை முடிந்து விடுவதில்லை. அப்படியே சந்தியடி சித்தீக் நானாவின் மில்லுக்குக் கொண்டுபோய்த் தீட்டிக்கொண்டு வரவும் வேண்டும்.

........................................................................

*நன்றி:*

- *செய்தி பத்திரிகை-கண்டி(1972)*
- *'கோடையும் வரம்புகளை உடைக்கும்' சிறுகதைத்தொகுப்பு (1984)*

*(இந்தக் கூப்பன் சமாச்சாரத்தில் மனதைச் சுட்ட சம்பவமொன்று ' கூப்பன அரிசி ' என்ற கதையாக உருவாகியது.)*



த. ரவீந்திரன்..

# அன்பின் இறுதி ஊர்வலம்..

பெரும் நிசப்தம் நிறைந்த
மரண வாசலில் யாரோ போல்
மௌனத்தை சுமந்திருந்தோம்
மனனமான நினைவுகளின்
ரணம் தாங்கிய மனதின்
கண்ணீரை துடைக்க முடியாமல்
கனக்கும் நொடிகளில் தொடங்கியது
இறுதி ஊர்வலம் பூக்களை தூவிய
அந்த பயணத்தில் நாமிருவரும்
விலகினோம் விடைபெற்றதில்
எரிந்து சாம்பலானது அன்பு..

மலர்மகள்

# அனிச்சை செயல்

எப்பொழுதின் வேலையின்
எவ்விடம் என்றாலும்
ஆம்புலன்ஸ் அலறல் சப்தம் கேட்கையில்
அவர் அறியாமலே
அதில் செல்பவர் நலமடைய வேண்டுவார்
கண் மூடி.

கண்மூடி தான் நினைவிழந்து
ஆம்புலன்ஸில் செல்கையில்
எதிரொலிக்கும் சப்த
அசரீரியில்
அனிச்சையாய்
அவர் அறியாமலே
குணமடைய வேண்டிக்
கொள்ளுமோ அவர் ஆழ் மனம்?

பாவலர் கருமலைத்தமிழாழன்


# இவர்கள்தாம் தமிழர்

நதிக்கரையில் பிறந்ததுதான் நாக ரீகம்
நல்நதியாம் வைகைநதிக் கரையி லின்று
புதியதொரு வரலாற்றை எழுது தற்குப்
புதையலெனக் கிடைத்ததுதான் கீழடிச் சான்று!
மதியுடனே பண்பாட்டில் உயர்ந்து நின்ற
மாயினந்தான் தமிழரென்று உரக்கச் சொல்ல
முதிர்தொன்மை இனமென்று ஞாலம் ஏற்க
முன்நிற்கும் உண்மைகள்தாம் கீழடிச் சான்று!

பட்டினப்பா லையென்னும் நூல்தாம் கூறும்
பருகுதற்கு நீரெடுக்கும் உறைகி ணற்றை
கட்டடங்கள் எல்லாமே சுட்டசெங் கல்லால்
கட்டியோட்டால் வேய்ந்துளதை அகழ்ந்தெ டுத்தார்!
மட்பாண்ட ஓடுகளில் தமிழெ ழுத்து
மாத்தமிழின் தொன்மையினைக் காட்டும் சான்று
வெட்டவெளி யானதின்று கீழடி யாலே
வெளியுலகம் கண்டதின்று தமிழர் மேன்மை!

போர்க்களத்தில் அறம்பார்த்தும் விழுப்புண் மார்பைப்
பொருதுபெறப் போட்டியிட்டும் பிறர்இல் நோக்கா
பேர்ஆண்மைக் காளையரைக் களவில் பார்த்தும்
பெருங்காளை அடக்கிவரக் கற்பில் சேர்ந்தும்
பார்சுற்றிக் கடல்கடந்து பொருளை ஈட்டிப்
பகிர்ந்தளித்தும் சாதியற்ற சமத்து வத்தில்
ஊர்இணைந்தும் மனமிணைந்தும் வாழ்ந்திப் பார்க்கே
உயரொழுக்கம் மொழிந்தவர்கள் தமிழர் அன்றோ!

கொடிபடரத் தேரீந்தும் காட்டிற் குள்ளே
கோலமயில் குளிர்போக்கப் போர்வை ஈந்தும்
துடித்திட்ட பறவைக்குச் சதையை ஈந்தும்
துயர்துடைத்த அன்புநேயப் பண்பு ரைத்தும்
வடித்திட்ட யாதும்ஊர் கேளிர் என்னும்
வளர்கருத்தில் ஒற்றுமையைப் பார்க்கு ரைத்தும்
அடித்தாலும் அரவணைப்பாய் என்று ரைக்கும்
அருங்குறளாய் வாழ்பவர்கள் தமிழர் அன்றோ!



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

# ஹைக்கூ கவிதைகள்

குழந்தைப் பருவம்/
அவ்வளவு அழகு/
கால் மாறிய செருப்போடு/

கால் மிதித்ததும்/
வலியில் அலறுகின்றனவோ?
வீழ்ந்த சருகுகள்/

சிலந்தி பின்னிய வலை/
முடிந்து விட்டது/
தட்டானின் விதி/

வந்துசேர்ந்தது மானியம்/
முகவரி எங்கேயோ?/
தூக்கிட்ட விவசாயிக்கு/

பள்ளிச் சீருடை/
எங்கேயும் காணவில்லை/
குழந்தைகளை/

மொழி அறியேனே../
புதுவீடு முகவரி தருவதெப்படி?/
முற்றத்து குருவிக்கூட்டுக்கு/

பொய்கள் சொன்னேன்/
புகழ் மாலை கிடைக்கிறது/
கவிதைகளுக்கு/

அந்திக் கிரணங்கள்/
எங்கும் பரவுகிறது/
அடுக்கு மல்லி வாசம்/

வைத்த முற்றுப்புள்ளி/
காற்புள்ளியானது/
காதலில்/

வயோதிக காலம்/
அளவுக்கதிகமாக வாட்டுகிறது/
கைவிட்ட வருத்தம்/

கள்ளுக்கடைக் குடிகாரன்/
கொழுத்துப்போகிறான்/
குத்தகைக்கு எடுத்தவன்/



# யாரது ...திற..!

நீலம்மூன்

பாஸ்போர்ட் செக்‌ஷன் மிகவும் பிஸியாக இயங்கிக் கொண்டிருந்தது. பலதரப்பட்ட மக்கள் வரண்டாவில் வருவதும் போவதுமாக திரண்டு இருக்க, மேகலை தன் கேபிளில் அமர்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

திரைப்படத் துறையைச் சார்ந்த பெரும்புள்ளி சிலர் கேள்விகளை அவளிடம் கேட்டுக் கொண்டிருந்தனர்.

மேகலை பொதுவாக நல்லவள் ஆனால் பேசுபவரின் பார்வையில் வித்தியாசம் தென்பட்டால் சீறும் புலியாக மாறிவிடுவாள்.

உடன் பணியாற்றுவோர், மேகலை இடம் பார்த்து கண்ணியத்துடன் பேசுவார்கள்.

“ரேவதி என்ன பண்ணிட்டு இருக்க சீக்கிரமா அந்த ஃபைலை கொண்டு போய் ஜெகன்நாதனிடம் கொடுத்துட்டு வா”எனக் கட்டளையிட்டாள்.

ரேவதி தயங்கி தயங்கி “நாளைக்கு லீவு வேணும்மா” தலையை சுண்டு விரலால் சுரண்டினாள்.

“என்னடி எதுக்கு லீவு? மாசத்துல எப்படியாவது அஞ்சு நாள் லீவு எடுத்துடு”

“பெரியவனுக்கு” ....

“என்ன ஆச்சு உடம்புக்கு ஒன்னும் இல்லையே”...

“ராத்திரி எல்லாம் தூங்காமா அழுது கிட்டே இருந்தான்.. ம்மா”

“எதுக்கு?”

“கூட படிக்கிற பசங்க எல்லாரும் எஸ்கேஷன் போறாங்க இவனும் போகணும்னு.. கையில காசு இல்ல அதனால” மென்று முழுங்கினாள்.

“லீவு போட்டா காசு கிடைச்சிடுமா? போய் வேலையை பாரு எப்ப பாரு ஏதாவது நொண்டி குதிரைக்கு சாக்குனு பேசி கிட்டு” என்று முடித்தாள்.

ரேவதி பார்ப்பதற்கு அழகாக இருப்பாள். அலுவலகத்தில் கடை நிலை ஊழியராக பணி புரிகிறாள்.

வந்து போகும் ஆண் மக்களுக்கு இவள் அழகு கண்ணுக்கு விருந்தாகும். எடுப்பான மார்பகமும் துடிப்பான கன்னங்களும் வழவழப்பான அதரமும் சுண்டி இழுக்கும் கண்களும் அவளுக்கு தேவன் கொடுத்த வரப்பிரசாதம்.

இவ்வளவு அழகைக் கொடுத்த கடவுள் நல்ல கணவனை கொடுக்க மறந்தார். காரணம் அவள் ஓர் இளம் விதவை. ரேவதியின் கணவன் ரகுநாதன் தனியார் கம்பெனியில் வேலை செய்தவன். சம்பாதிக்கும் பணத்தை டாஸ்மாக் கடையிலேயே தொலைத்து விட்டு வெறும் கையை வீசிக்கொண்டு வீடு செல்லும் வெட்டுவேர்த்து தனவான்.

இரண்டு பிள்ளைகள் சந்துரு,பிரகாஷ் இவர்களை கடைத்தேற்ற அவள் பாடுபடுகிறாள். எந்த வேலைக்காவது அதிகப்படியாக செல்லலாம் என்றாலும் அழகு ஒரு அஸ்திரமாக அவளுக்கே திரும்புகிறது தன்னை தற்காத்துக் கொள்ள ஒவ்வொரு நேரமும் அவள் போராட வேண்டிய சூழல்.

“ஏய் ரேவதி சாப்டியா” என்று கனிவுடன் கேட்டாள்

ம்...ம்..... தலையை அசைத்தாள்.

“சரி உன் பிள்ளைக்கு எவ்வளவு பணம் வேணும்” என கேட்டதும் அவள் முகம் மலர்ந்தது.

“ ம்...மா ஒரு 500 ரூபாய் இருந்தா குடும்மா நான் அடுத்த மாசம் சம்பளத்துல”..

“போதும் போதும் என்று கையை உயர்த்திவிட்டு பையில் இருந்து ஐநூறு ரூபாயை எடுத்து கொடுத்தாள் மேகலை.

“இந்த பாரு இந்த மாதிரியே நீ உன் பையன் சொன்னா அப்படின்னு சொல்லிட்டு வந்து நிக்காத இதை எடுத்துட்டு போயி ஜெகன்நாதன் டேபிள் வைத்து விடு. அவள் சரி துள்ளி குதித்து கொண்டு ஓடினாள்.

முகத்தில் படர்ந்த சந்தோஷத்தை தூரத்தில் இருந்து கவனித்தான் செட் கிளர்க் சந்தோஷ் ''என்னம்மா ரொம்ப சந்தோஷமா இருக்கிற என் பேர்ல இருக்குறது உன் முகத்தில் தெரியுதே'' என்று அருகே வந்து நின்றான்.

''ஜெகநாதன்சார் டேபிள்ல வைக்கனும்''.

''வையி யாரு வேண்டாம்னா'' என்று தன் இடக்கையால் இடுப்புக்கு மேல் ஒரு அடி அடித்து கண்ணையும் சுருக்கினான்.

அவன் பொறுக்கி தனத்தை பொறுக்க முடியாமல் ''இந்தா பாரு இந்த மாதிரியெல்லாம் மரியாதை இல்லாம நடக்காதே''

''என்னா பண்ணுவ''

''சத்தம் போட்டு ஊர கூட்டிடுவேன் ஜாக்கிரதை'' என்று கடிந்துரைத்தாள்.

''ஓ!அப்படியா?''என்று சிகரெட் பிடித்து கருத்த இதழை குவித்து பதில் அளித்தான்.

அதே நேரத்தில் மேகலை அங்கே வருவதைப் பார்த்தவன் அவ்விடம் விட்டு நகர்ந்தான். ரேவதிக்கு விடுதலை கிடைத்தது.

மாலை நாலே முக்கால் மணிக்கு மேகலை சீக்கிரமாக வீட்டிற்கு கிளம்பினாள்.

''இத பாரு ரேவதி, சீக்கிரமா நீயும் கிளம்பிடு அவங்க சொன்னாங்க இவங்க சொன்னாங்கன்னு இருக்காத புரிஞ்சுதா'' என்று அவளுக்கு கட்டளையிட்டு புறப்பட்டாள். மேகலை இல்லை என்றதும்,அடுத்து ஒரு பத்து நிமிஷத்துக்கு பிறகு இருப்பவர்கள் அத்தனை பேரும் தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு டான்னு 5 மணிக்கு எல்லாம் கிளம்பி விட்டனர்.

இவளும் அறைகளைக் கூட்டி சுத்தம் செய்து எல்லா வேலைகளையும் செய்து முடித்து கையை கழுவதற்கு பாத்ரூமுக்குள் நுழைந்தாள். அதே சமயம் கதவு சாத்தும் சத்தம் கேட்டு திரும்பி பார்த்தாள்.

பல்லை இளித்துக் கொண்டு சந்தோஷம் நின்று கொண்டிருந்தான்.

''இது என்ன கருங்காலி தனம் யாராவது பார்த்தா அசிங்கம் கதவ திற.

சந்தோஷ் வில்லங்கமாக ஹா...ஹா...சிரித்தான்.

''பொம்பள பாத்ரூமுக்குள்ள வர்றியே வெக்கமா இல்ல? நீ அக்கா தங்கச்சியோட ''...என்று கோபம் பீறிட்டு வந்தது.

''நிறுத்து இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படி கத்துற என்று அவனுடைய பார்வை அவள் உடல் மீது நாலா பக்கமும் மேய்ந்தது கையை அருகே கொண்டுவர

''இத பாரு இதெல்லாம் நல்லா இல்ல நீயும் கல்யாணமானவ உனக்கும் குழந்தை குட்டி இருக்காங்க எல்லாம் ஞாபகம் வச்சுக்கோ நான் சத்தம் போட்டேன்னா உன் பேரு நாறிடும்..ஜாக்கர்த்த'' என்று அவள் பொறிந்தாள்

''அப்படியா நீ என்ன சத்தம் போட்டாலும் இங்கு யாருமே வர மாட்டாங்க தெரியுமா?'' என்று தெனாவாட்டாகப் பேசி ஓர் அடி எடுத்து வைத்து அவள் முகத்தருகே தன் முகத்தை கொண்டு சென்றான்.

அதே சமயம் கதவு தட்டும் சத்தம் ''ஐயோ யாரோ வந்துட்டாங்க போல இருக்கு கதவை திறய்யா என்று பதறினாள்.

''இரு ''என்று கூறினான். ஆனால் விடாமல் கதவு தட்டவும் ''வெளியே வாங்க''என்ற பெண் குரலைக் கேட்டு இருவருமே அதிர்ந்தனர்.

''யாரது உள்ளே... சீக்கிரம் வாங்க'' வெளியே சத்தம் வராமல் இருக்கவே.

வாட்ச்மேன் முனியாண்டி ''அம்மா என்னம்மா?''

'' இந்த கதவை கொஞ்சம் உடை பார்க்கலாம்'' என்று ''இதோ நான் சுத்தி எடுத்து வரட்டுமா'' என்று அவன் ஒரு அடி எடுத்து வைத்து சென்றான்.

அதற்கு மேல் அங்கே நின்றால் நன்றாக இருக்காது என்று ''அம்மா நான் தான்''குரல் கொடுத்தாள் ரேவதி.

''அதாண்டி ஏண்டி கதவை மூடிட்டு இருக்க கதவைத் திற'' என்று கத்தினாள்.

அவசர அவசரமாக கதவை திறந்தாள் எதிரே அவள் பின்னால் சந்தோஷ் நிற்பதை பார்த்ததும் தூக்கி வாரி போட இப்படியெல்லாம் ஏதாவது ஏடாகூடமா நடக்கும் நினைச்சுகிட்டு தான் போனேன். காலையில இருந்து அவன் முழியே சரியில்லை. முக்கியமான பைலை எடுக்க திரும்பி வந்தா, எனக்கு அவசரமா பாத்ரூம் வந்துடுச்சு என்று வெறுப்போடு முகத்தை திருப்பினாள்.

''நான் எந்த தப்பும் செய்யலமா'' அழுதாள்.

'' நீ தப்பு செய்தியா? இல்லையா?கேட்க விரும்பல உன் வயசு கோளாறு: போயும் போயும் இந்த பொறுக்கிய தானா தேர்ந்தெடுக்கணும். ஏண்டாப்பா நீ இவ்ளோ கல்யாணம் பண்ணிக்கிறியா?''

''என்ன மேடம் பேசுறீங்க'' என்று அவளை எதிர்த்து பேசினான்.

“நிராதரவு அற்ற பெண்கள் வேலைக்கு வந்தால் உங்க லுச்சா புத்தி அத்தனைக்கும் வளைந்து கொடுப்பாங்க என நினைச்சியா?” என்று கேட்டதும்

“என்ன மேடம் ரொம்ப ஓவரா பேசுறீங்க”, மேகலையை ஒரு தரம் மேலும் கீழும் பார்த்து மந்தகாசமாக சிரித்தான்.

“இந்த நிலை நாளைக்கு உன் மனைவிக்கு ஏற்பட்டால் என்ன செய்வாய்?”

“மேடம்” ...பதறினான்.

“ஏன் கொதிக்கிற வெந்நீர்ல கைவிட்ட மாதிரி நெஞ்சு வலிக்குதோ?”

முகத்தில் ஆயிரம் வலிகள் தெரிய “மேடம்”...

“காலம் இப்படியே செல்லாது சந்தோஷ் ஜாக்கிரதை” என்று அச்சுறுத்தி விட்டு

“நீ செய்த கெடு புத்திக்கு ரேவதி இடம் மன்னிப்பு கேளு” என்றாள் மேகலை.

“மேடம்...அவகிட்ட போயி”... கேவலமாக அவளைப் பார்த்து சிரித்தான்.

அவளின் தன்மானத்தை தானே அழிக்கப் பார்த்தே... உன்னால முடிஞ்சதா.

‘கெட்டுப் போகிற பாலுக்குள்ள தான் கெடாத நெய் இருக்கு புரிஞ்சிக்கோ. அழிந்து போற இந்த சரீரத்து மேலயா நீ ஆசைப்பட்டே அதுக்குள்ள தான் அழியாத ஒரு ஆத்மாவும் இருக்கு அந்த ஆத்மா அவள்’..

‘அம்மா விடுங்க அம்மா என்னிக்காவது ஒரு நாள் இந்த தண்டனையை அவன் அனுபவிப்பான்’ என்று கூறி மேகலையை கடந்து நடந்து சென்றாள்.

“பாத்தியா சந்தோஷ் இதுதான் பெண்ணியம் என்பது நீ அவளுடைய உடம்ப பார்த்த அவ உன்ன கேவலமா”.... சிரித்துக் கொண்டே குப்பை தொட்டியை பார்த்தாள்.

பேக்குடன் வந்து நின்ற ரேவதி பக்கம் திரும்பி “நீ கிளம்பு வீட்டுக்கு” என்று கூறி மேகலையும் கிளம்பினாள்.

அடுத்த சில தினங்களில் சந்தோஷத்திற்கு டெல்லியில் பணி மாற்றம் கிடைத்தது. மனைவியை சென்னை யிலேயே விட்டுச் சென்றான்.

அன்று ரேவதியிடம் அவளின் சுயமரியாதையை தரக்குறைவாக அதிகமாய் பேசியதினால் அமைதியை இழந்தான். அவள் கொடுத்த தண்டனை ஒவ்வொரு நாளும் தன் மனைவியை பிரிந்த இருந்த பொழுது தன்னைப் போன்று கேவலமாக தன் மனைவியிடம் யாராவது நடந்து விடுவானோ என்ற அச்சமே உள்ளத்தில் ரம்பமாக அறுத்தது. விதி வலியது என்பதை அறிந்தான்.

### ஆலங்குடி,வெ.தமிழ்க்கனல்

# அரியாசனத்தின் ஒற்றைச் சிறகு

அறைமுழுக்க வியாப்பித்திருக்கும்
நிக்கோடின்களுக்கு
மத்தியில் வந்தமர்கிறது
அப்பறவை

குடுவையிலிருந்து சுதந்திரம்
கிடைத்த மகிழ்ச்சியில்
வேடனின் மிடற்றிற்குள்
சவலைப் பிள்ளையாய் நகர்கிறது
அடர் சிவப்பு நிற திரவம்

குறு புன்னகை பூத்தபடி
அப்பறவையை தன்னைநோக்கி
அழைத்தவன்
அதன் தசைகளை பரிசாகக்
கேட்டுப் பெறுகிறான்

சிறு ஆசுவாசத்திற்குப் பின்
தன் கூடு நோக்கி பறக்கும்
அப்பறவையின் கூரிய அலகில்
சில ரூபாய்த் தாள்கள்


வேடனின் அரியாசனத்தில்
உதிர்ந்து கிடக்கும்
ஒற்றைச் சிறகானது
இப்போது அறைமுழுக்க
எழுதத் தொடங்குகிறது
அப்பறவையின் வலியை

**ரோஷான் ஏ.ஜிப்ரி**

# பிரதியின் பிம்பம்

நான் பயணி
தொலைவதும் கண்டுபிடிப்பதுமாக
எனது காலம்
எதிர்திசையில்
ஊடறுத்து உயிரறுக்கிறது
போர்வாளால் ஒரு பொறி
சோடிக்கப்பட்ட கதையல்ல உண்மையின்
உரைக“ள்”(ல்)

பனி சூடிய பகல்வெளியில்
பளிங்குச் சிலையது
மலை தேசத்து கொழுந்து விரல்கள் அவை
அவளொரு கூடைக் கனா
எந்த நிறுத்தத்தில் வந்தாள்
என்ன நெருக்கத்தில் நின்றாள்..?
ஏன் இப்போது
பவ்வியமாக உள்ளே பதுங்கியிருக்கிறாள்..??
கேள்விகள் மட்டுமே என்னிடம் கேலியாக.....
பசியுடன் இருக்கிறது
அறை இன்னும் சாப்பிடவில்லை
விளக்கணைய காத்திருக்கிறது இருளை விழுங்கி
ஏப்பமிட
செவ்வந்தியின்
செவ்வரத்திப் பூவிதழ்
சொற்கள் ஒளிந்திருக்கும் குகை
போர்வாள் சொருகிய
செருக்கு
புருவம் இரண்டிலும்
கூர்மையில் தொங்குகிறது
வெட்டிச் சாய்க்க விழிமுனை
சம்மந்தம் இல்லாமல் சேர்ந்தாள்
சம்மதம் இல்லாமல் பிரிந்தாள்
மழையை உடைத்து பிரிக்கிறது பேரிடி
கலங்கித்தெளிந்த
வெள்ளத்தில்
நின்ற சுவடுகளை அழித்துக்கொண்டு
இரண்டு ஏரிகளில்
ஒரு வானம் ஒதுங்குகிறது
தனிமைப்படுத்தப்பட்ட என்போல்!



**சே கார்கவி கார்த்திக்**

# பயணப்படுதலின் பேறுகாலம்

எனது பாதங்களில் ஒட்டிய மண் துகளெல்லாம்
என் முன் பயணித்தவர்களின்
தவறிய பயணத்துகள்கள் தான்
வெப்பம் மிகுந்து
பயணத்தின் இடையினிலே
நான் அமர தயங்கிய இடத்தில் தான்
சிறு வண்ணத்துப்பூச்சியும்
பசி மறுத்த நாய்க்குட்டியும்
எழுந்து சென்றன
எனது கண்களுக்கு
நீலம் பச்சையாகவும்
மஞ்சள் வெண்மையாகவும்
நீ நானாகவும்தான் தெரிந்தது
வெள்ளையுறை அணிந்த கண்களுக்கு மட்டும்
இருளாகவே தெரிந்த்து
கரையத் தொடங்கிய காகத்தை படர்ந்த நிழல்
போல...
மிகவும் சந்தோசமான நிகழ்வுதான்
கடவுள் பூமிக்கு வருவதும்
இரு கரங்களும் கண்ணீர் மல்க சுமக்க
தொடங்கியது
மகளின் பேறு நிகழ்வில்...



# வசந்தம்

சிவசங்கரிகுருநாதன்

கதிரவன் தன் செங்கதிர்களைப் பரப்பி கீழ்வானில் உதயமாகிக் கொண்டிருந்தான். எங்கோ தூரத்தில் கேட்கும் குயிலின் ஓசை இன்னிசையாய் ஒலிக்க அழகான அந்தக் காலை வேளையில் குளித்து முடித்து விட்டு மொட்டை மாடியில் நின்று சூரியவணக்கம் செலுத்திக் கொண்டு இருந்தான் மாதவன். கீழே வானதி "என்னங்க....." என்று கூப்பிடும் குரல் கேட்டு திரும்பியவன்,

"இதோ வர்றேன்" என்று கூறி கீழே இறங்கி வந்தான் குளித்து முடித்துத் தலையில் கட்டிய ஈரத்துண்டுடன் வந்து நின்ற வானதியைப் பார்த்தவுடன்,

"என்ன அவசரம். நா வந்து எடுத்துக்க மாட்டேனா?" என்று செல்லமாகக் கடிந்து கொண்டான். பின் காப்பி டம்ளரை கையில் வாங்கிக்கொண்டு "போமா போய் தலையைத் துவட்டு" என்றான் அக்கறையுடன். "ம்..... சரிங்க என்றவள், தயங்கி தயங்கி,

"ஏங்க இன்னைக்கு என் தோழி தேன்மொழிக்கு வளைகாப்பு என்னையும் வரச்சொல்லியிருக்கா, போகலைனா தப்பா எடுத்துக்குவா" என்றதும், மாதவன் கோபமாக

"உங்கிட்ட எத்தனை வாட்டிமா சொல்றது நீ போவ, யாராச்சும் ஏதாச்சும் சொன்னாங்கன்னு அழுதுகிட்டு வருவ அது எதுக்குன்னுதான் போகாதேன்னு சொன்னா கேட்க மாட்டேங்கற" என்றான்.

"இல்லைங்க அவ என் பால்ய சிநேகிதியாச்சே போகாம எப்படிங்க... " என்ற வானதியிடம்,

"சரி உன் இஷ்டம் என்னமோ பண்ணு" என்றான் அரைமனதுடன். மாதவனுக்கும், வானதிக்கும் திருமணமாகி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டது. இன்னும் குழந்தை இல்லாததால் அக்கம்பக்கத்தினரின் குத்தல் பேச்சுக்களுக்கும், நக்கல் பேச்சுக்களுக்கும் ஆளாயினர். இன்னும் ஒன்னுமில்லையா? என்று கேட்போரின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவித்தனர். இந்தச் சூழ்நிலையில் வளைகாப்பிற்கு வானதி செல்வது மாதவனுக்குப் பிடிக்கவில்லை. இருப்பினும் அவள் ஆசைப்படுவதால் வேறுவழியின்றி ஒத்துக்கொண்டான். தோழியின் வளைகாப்பிற்கு ஆசையோடு ஆயத்தமானாள் வானதி.

பின் விடுமுறை என்பதால் வீட்டிலிருந்த மாதவனிடம் சொல்லிவிட்டு, பக்கத்தில் இரண்டு வீடு தள்ளி இருந்த தேன்மொழி வீட்டைச் சென்றடைந்தாள். ஏற்கனவே நலங்கு வைக்க ஆரம்பித்திருந்தனர். கன்னத்தில் பூசிய சந்தனம், குங்குமம், கை நிறையக் கண்ணாடி வளையலுடன் தேன்மொழியைப் பார்த்தவளுக்கு ஒரு நிமிடம் தன்னை அந்த இடத்தில் வைத்துப்பார்த்து மகிழ்ந்தாள்.

"வா வானதி" என்ற தோழியின் குரல் கேட்டு நினைவுக்கு வந்தவள் "ஆமா" என்பது போல் தலையாட்டிவிட்டு நின்றவளை

"ஏண்டி பக்கத்துல இருந்துகிட்டு இவ்வளவு நேரங்கழிச்சா வருவ, வா வந்து நலங்கு வை" என்று சிரித்துக்கொண்டே தேன்மொழி கூப்பிட ஆசையோடு நலுங்கு வைக்கச் சென்றாள் வானதி. அப்பொழுது அருகில் நின்று கொண்டிருந்த பக்கத்து வீட்டு சற்குணத்தம்மாள் தடுத்து,

"நில்லு நீயே தரிசு நிலமா கிடக்க. நீ நலங்கு வச்சா குழந்தை எப்படி நல்லபடியா பிறக்கும்? அவதான் ஏதோ பாசத்துல கூப்பிட்டா நீயில்ல வேண்டாம்னு சொல்லி ஒதுங்கி நிக்கனும். உடனே வந்துட்டியே குடு இங்க" என்று கையிலிருந்த சந்தனக் கிண்ணத்தை வெடுக்கென்று பிடுங்கினாள்.

இதைச் சற்றும் எதிர்பாராத வானதியால் இந்த வார்த்தைகளின் சூடு தாங்காமல் தணலிலிட்ட புழுவாய்த் துடித்தாள். இதற்குமேல் இங்கிருப்பது நெருப்பின் மேல் நிற்பதுபோல் இருக்க அழுது கொண்டே வீட்டைநோக்கி விரைந்தாள். வீட்டினுள் நுழைந்தவள் நேராகப் படுக்கை அறையிலிருந்த கட்டிலில் கிடந்து குலுங்கி அழுதாள். போன வேகத்திலேயே திரும்பி வந்த வானதியைப் பார்த்த மாதவனுக்கு என்ன நடந்திருக்கும் என புரிந்து கொள்ள முடிந்தது. பின்னாடியே ஓடிச்சென்றவன் அழுதுகொண்டிருந்த வானதியின் பக்கத்தில் அமர்ந்து தலையை கோதியபடி,

"இதுக்குத்தான் அங்க போக வேணான்னு சொன்னேன். என்ன நடந்திருக்கும்னு தெரியும் விடும்மா" என்றான் ஆறுதலாக. அவனைப் பார்த்த வானதி,

"அவ என்னோட சிநேகிதிங்க, அவளுக்கு நா நலுங்கு வச்சா குழந்தை நல்லபடியா பிறக்காதாம், அந்த சற்குணத்தம்மா சொல்றாங்க, எனக்குக் குழந்தையில்லாததற்கு நா என்னங்க பண்ணுவேன்" என்று கதறியழுதாள்.

அவளைத் தேற்றுவதற்குப் பெரும்பாடுபட்டவன், ஊரிலிருக்கும் அவள் அம்மாவிற்கு போன் செய்து நடந்ததைச் சொல்லி பேசச் செய்தான். பின் ஒருவாறு அழுகையை நிறுத்தியவள். மாதவனிடம்,

"அம்மா பத்து நாள் ஊருக்கு வந்து இருந்துட்டுப் போன்னு சொல்றாங்க" என்றதும் அவளுக்கு ஒரு மாறுதலாக இருக்கட்டும் என்று சரியென்று அவள் அம்மா வீட்டிற்கு அனுப்பி வைத்தான்.

அம்மா வீட்டிற்க்கு வந்து ஏழு நாட்கள் ஆன நிலையில், ஒருநாள் காலை வெளியில் ஓரே சத்தமாக இருப்பது கண்டு எழுந்து வந்தவள் வாசலில் அம்மா பார்வதி எதிர்வீட்டுக் கனகாவுடன் ஏதோ கிசுகிசுத்துக்கொண்டிருப்பதையும், பக்கத்து வீட்டு சாந்தி வீட்டில் போலீஸ் வந்து நிற்பதையும் பார்த்தவள் என்னவாக இருக்குமென நெற்றியைச்சுருக்கியவாறு யோசித்து கொண்டிருந்தாள்.

பின் சிறிது நேரம்கழித்து உள்ளே வந்த அம்மாவிடம் "என்னம்மாஆச்சு" என்று வானதி கேட்க,

"அதையேண்டி கேக்குற அந்த பாவிப்பய ரத்தினம் பொண்டாட்டி மேல சந்தேகப்பட்டு 'இந்தப் புள்ளைங்க ரெண்டும் எனக்குப் பொறக்கலேன்னு' எப்பம்பாரு சண்டை போட்டுக்கிட்டே இருப்பான். நேத்து ரெண்டு பேருக்கும் சண்ட முத்திப்போச்சு போல, பொண்டாட்டியையும், ரெண்டுவயசு குழந்தையையும் கொன்னுபுட்டு அவனும் தூக்குப்போட்டு செத்துட்டானாம். சாந்தி அவ மூத்த புள்ளைய அவ அம்மா வீட்டுல விட்டிருந்தா. அதனால அதுமட்டும் தப்பிச்சது,ம்......தப்பிச்சு என்ன புண்ணியம்....?சாந்திக்கு அப்பா கெடையாது, அம்மாவோ வயசானவ, இன்னும் எத்தனை நாளைக்கு அந்தப் புள்ளைய பாக்க முடியும். பாவம் அந்தப் புள்ள அநாதையாக நிக்கப்போகுது. இப்படிப்பட்ட அப்பனுக்குப் பொறந்ததத் தவிர அது என்ன பாவம் பண்ணிச்சு? ம்......என்னத்த சொல்ல"

என்று கவலைப்பட்ட பார்வதி உள்ளே சென்றுவிட, இதைக்கேட்ட வானதி ஆர்வம் மேலிட சாந்தியின் வீட்டருகே கூடியிருந்த கூட்டத்திற்கிடையே சென்றவள் அங்கே சாந்தியின் உடலைப்பார்த்துக் கதறிக்கொண்டிருந்த அவள் அம்மாவைப் பார்த்தாள். அவள் பக்கத்தில் சாந்தியின் இரண்டு வயது குழந்தை அம்மாவைக் கண்டு சிரித்து விளையாடிக்கொண்டிருந்தது. இதைப்பார்த்த வானதிக்குக் கண்ணில் நீர் அரும்பியது. சாந்தியின் அம்மாவோ,

"அடிப்பாவி எத்தனையோ தடவ சொன்னேனே. அவன விட்டுட்டு வாடின்னு......கேட்டியா? அவனத் திருத்திருவேன்னு சொல்லி இப்படி அவன் கையாலேயே செத்துக் கிடக்கிறியே. அந்தப் பிஞ்சையும் விட்டு வைக்கலியே" என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

"இங்க பாரு ஏதுமறியாத இந்தப் பச்ச மண்ண வச்சிக்கிட்டு நா என்னடி பண்ணுவேன். எப்படி வளக்கப் போறேன்னு தெரியலையே" என்று புலம்பி அழுதாள். இதைப்பார்த்த வானதிக்கு மனம் கனத்தது. அப்போது கூட்டத்தினிடையே திடீரென வெளிப்பட்ட போலீஸ்காரர்,

"ஏம்மா.... தள்ளிப்போமா" என்று அனைவரையும் விளக்கிவிட்டுச் சாந்தியின் உடலையும், மற்ற இரு உடலையும் கொண்டு செல்ல அழுதுகொண்டே சாந்தியின் அம்மாவோ பின்னாலேயே ஓட, விளையாடிக் கொண்டு நின்ற குழந்தையை வானதி கையிலெடுத்தாள். அது அவளைப் பார்த்துக் கள்ளமற்ற சிரிப்பை உதிர்த்தது. அதன் பிஞ்சு விரலின் ஸ்பரிசம் அவள் மனதை என்னவோ செய்ய மெய்சிலிர்த்துப் போனவளின் கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாகக் கொட்டியது. ஒரு முடிவுக்கு வந்தவளாய் அக்குழந்தையைத் தன் மார்போடு அணைத்து முத்தமிட்டாள் வானதி.

## மீ. யூசுப் ஜாகிர், வந்தவாசி

*மனிதர்களின்*
*வாழ்க்கை புத்தகத்தில்*
*இறுதி அத்தியாயம்*
*மரணம்.*

*சிலருக்கு ரகசியமாகவும்,*
*சிலருக்கு இலகுவாகவும்,*
*சிலருக்க்கு சிக்கலாகவும்.,*
*சிலருக்கு கொடுமையாகவும்.,*
*முடிந்து விடுகிறது.*

*ஆயிரமாயிரம்*
*வண்ண வண்ண*
*ஆடைகள் அணிந்து*
*அழகாய் இருந்தாலும்,*
*வாழ்க்கையின் இறுதி*
*பயணத்தில்,*
*வெள்ளை ஆடை*
*மட்டுமே நிச்சயம்.*

*மௌனத்தை விட*
*சிறந்த ஆறுதல் மொழி*
*இல்லை*
*மரணித்தவரின் வீட்டில்..!!!*




# காற்றுவெளி மின்னிதழ்- ஒரு பருந்துப் பார்வை

**முனைவர் சு.சோமசுந்தரி, புதூர்**

காற்றுவெளி மின்னிதழ் 2002ஆம் ஆண்டு இலண்டனில் இருந்து சோபா அவர்களை ஆசிரியராகக் கொண்டு முல்லை அமுதன் அவர்களால் தொடங்கப்பட்டது. காற்றுவெளியின் இதழ்கள் பல சிறப்பிதழ்களாகவும் வெளிவந்துள்ளன. உலகளாவிய தமிழர்களின் படைப்புகள் வெளிவரக்கூடிய இதழாகக் காற்றுவெளியின் வாசகப்பரப்பளவு விரிவானது. எல்லோரும் விரும்பக்கூடிய கலை, இலக்கிய இதழாக வெளிவருகிறது. மிகச்சிறந்த தமிழ் ஆளுமைகளை அடையாளம் காட்டக்கூடிய இதழாகவும் காற்றுவெளியின் பங்களிப்பு தமிழ்ச் சமூகத்தில் அமைந்துள்ளது. அந்த வகையில் காற்றுவெளி இதழ் தமிழ் இலக்கிய உலகில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

காற்றுவெளியின் சிறப்பம்சம் என்னவெனில் இதழில் வரும் படைப்பாளர்களின் படைப்புகளின் நுட்பமான உணர்வுகளை வெளிப்படுத்தும் நவீன ஓவியங்கள் ஆகும். தனிச்சிறப்புப் பெற்ற இந்த ஓவியங்கள் படைப்புகளின் சிறப்புகளை வெளிக்காட்டுவதோடு, பார்வையிடும் வாசகர்களைச் சுண்டியிழுக்கும் ஆற்றல் பெற்றவை என்றால் அது மிகையில்லை. இன்னொன்று காற்றுவெளியின் அட்டைப்படங்களும் அப்படிப்பட்டதே. காற்றுவெளி மின்னிதழை நெகிழன் அவர்கள் மிக நேர்த்தியாக வடிவமைத்து வருகிறார்.

கவிதை, சிறுகதை, நூல் அறிமுகம், ஆய்வுக் கட்டுரைகள் என பலதரப்பட்ட இலக்கிய ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருகிறது. காற்றுவெளியில் வரும் படைப்புகளில் மிகச்சிறந்த கருத்தாக்கங்கள் பெற்றவையே முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இலங்கையின் செம்பியன் செல்வன், எஸ்.அகஸ்தியர், க.சொக்கலிங்கம் ஆகியோரைப் பற்றிய சிறப்பிதழ்களையும் கவிதை, சிற்றிதழ், மொழிபெயர்ப்பு ஆகியவை பற்றிய சிறப்பிதழ்களையும் கொண்டு வந்துள்ளது. இச்சிறப்பிதழ்களில் வரும் கட்டுரைகள் தரமானதாகவும் நூலாக்கம் செய்வதற்குரியதாகவும் அமைந்துள்ளன.

உலகமெங்கும் இருக்கும் தமிழ் ஆளுமைகளின் சிறப்புகளைத் தனது சிறப்பிதழ்கள் மூலம் காற்றுவெளி வெளியிட்டு வருகிறது. இதனால் உலகெங்கும் வாழும் தமிழினத்தை ஒன்றிணைப்பதோடு தமிழுணர்வு மேம்பட வழிவகுக்கிறது. அறிமுக எழுத்தாளர்களைக் கொண்டாடுவதிலும் காற்றுவெளியின் பங்களிப்பு உவகையளிக்கிறது. புதிய, புதிய எழுத்தாளர்களின் படைப்புகளுக்கும் ஊக்கமளிக்கிறது.

இவ்விதழின் ஆசிரியரான சோபா அவர்கள் மிகச்சிறந்த சிறுகதை எழுத்தாளர். முல்லை அமுதன் என்ற மகேந்திரன் இரத்தினசபாபதி அவர்கள் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1980களில் எழுதத் தொடங்கிய இவர் முல்லைஅமுதன் என்ற புனைபெயரில் கவிதை, சிறுகதை, கட்டுரை, நாவல்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து படைத்துள்ளார். ஆசிரியர் சோபா அவர்களும் முல்லைஅமுதன் அவர்களும் எழுத்தாளர்களாய் இருப்பதால்தான் காற்றுவெளி இதழைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

பத்திரிகை உலகிற்கே உரித்தான சிக்கல்களும் இடர்களும் வந்தாலும் அவற்றையெல்லாம் கடந்து காற்றுவெளி பயணிப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இவ்விதழுக்கான பயணத்தில் முல்லை அமுதன் அவர்களின் பெரும்பணி வியப்பிற்குரியது. தன்னார்வ அடிப்படையில் தமிழுக்குத் தொண்டு செய்யும் முல்லை அமுதன் அவர்கள் தமிழ் இலக்கிய உலகுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். எந்தவிதத் தற்சார்பும் இல்லாது இயங்கும் காற்றுவெளியின் நடுவுநிலைமை பாராட்டத்தக்கது. காற்றுவெளி தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகில் பட்டொளி வீசி பறக்கட்டும்!

**நந்தவனம் சந்திரசேகரன். திருச்சி**

# வாழ்தல் எளிதானது

கடந்துபோகவே காத்திருக்கிறேன்
காலத்தினிடமிருந்து

எதைக் கிழித்துவிட்டேன்
மார்தட்டிக்கொள்ள

என் தோள்களை
நானே தட்டிக்கொள்கிறேன்
உடைந்துவிடாமலிருக்க

சிலர் தவறு என்றும்
பலர் சரி என்றும் பயணிக்கும்போது
நான் நேர்க் கோட்டை
தேடியலைகிறேன்

மரணத்திற்கு மட்டுமே
ஒத்திகைபார்ப்பதில்லை
எப்போது வரும் என்பது தெரியாததால்

இங்கே வாழ்தல் எளிதானது
மரணத்திற்குப் பின்புதான்



**கண்ணன் விஸ்வகாந்தி**

குட்டிகளை ஈன்ற பின்னர்
இடம் மாற்றி இடம் மாற்றி
ஒளித்து வைத்து விளையாடும்
தாய்ப்பூனை போல
அர்த்தத்தையும்
கூடவே நமது சந்தோஷத்தையும்
எங்கெங்கோ வைத்து விட்டு
அலுக்காமல் விளையாடும்
இம் மீச்சிறு வாழ்வு

❍ சிறுகதை

# போர்த்தொழில் பழகு

நெல்லை அன்புடன் ஆனந்தி



காலை 6 மணிக்கு அலாரம் அடித்தது,

போர்வைக்குள் நெளிந்தபடி கைகளை வெளியே நீட்டி அலாரத்தை அணைத்துவிட்டு மீண்டும் போர்வையைப் போர்த்திக் கொண்டாள் மாலா. அவள் மூடிய போர்வையை மெல்ல எழுத்தாள் காயத்ரி. சலித்துக் கொண்டபடி கண்களை விரித்தாள் மாலா.

“இன்னிக்கு என்ன பரிட்சை தெரியுமில்ல?

நம்ம ரெண்டு பேருக்குமே தகராறு பண்ற கணிதப் பரிட்சை. வா கிளம்பலாம். சீக்கிரமா போனாத்தான், குளிக்கும் வரிசை கம்மியா இருக்கும்.. சீக்கிரம் குளித்துக் கிளம்ப முடியும்” என்று அவசரப்படுத்தினாள் காயத்ரி.

11-ஆம் வகுப்பு படிக்கும் மாலாவும், காயத்ரியும் விடுதியில் தங்கிப் படிக்கிறார்கள். கணிதப் பரீட்சை என்று சொன்னதும் தன் கண்களில் கணக்கு வாத்தியார் நினைவு வர படாரென்று எழுந்து உட்கார்ந்தாள் மாலா. அவள் முகத்தில் ஒரு கடினம்.

படுக்கையை விட்டு எழுந்து போர்வையை மடித்தபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்தாள். மீண்டும் காயத்ரி அவசரப்படுத்த மாற்றுத் துணியை எடுத்துக் கொண்டு குளிப்பதற்கு இருவரும் சென்றார்கள்.

வரிசையில் நின்று குளித்து முடித்துவிட்டு

காலை உணவை அவசரமாக சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் “மாலா.. இந்த இட்லியைச் சாப்பிட்டுப் போனா நமக்குத் தெரிஞ்ச கணக்கும் மறந்துரும் போலடி” என்று சொல்லவும் இருவரும் சிரித்தார்கள். பள்ளியை நோக்கி விரைவாக நடந்தார்கள்.

பள்ளியை ஒட்டியபடியே அவர்களுடைய விடுதியும் இருந்ததால் அதிக தூரம் நடக்க வேண்டிய தேவையில்லை. வாட்ச்மேன் தாத்தாவிடம் வணக்கம் சொல்லிவிட்டு இருவரும் உள்ளே நுழைந்தார்கள். வகுப்பறையில் போய் புத்தகப்பையை வைத்து விட்டு, கணக்கு நோட்டைக் கையில் எடுத்தபடி மேஜையில் அமர்ந்தாள் மாலா. அருகில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்த காயத்ரி, தற்செயலாய்த் திரும்பிப் பார்க்க மாலாவின் கண்களில் இருந்து இரண்டு சொட்டு கண்ணீர்த் துளி அவளுடைய கணக்குப் புத்தகத்தில் விழுவதைக் கவனித்து விட்டாள்.

“ஏய் என்ன ஆச்சுடி, பயப்படாத நம்ம கண்டிப்பா பாஸ் ஆயிடலாம். எதுக்கு கவலைப் படுற?” என்று கேட்டாள்.

“ஒன்னும் இல்லடின்னு” சொல்லிவிட்டு பாடத்தில் கவனத்தைத் திருப்ப முயன்றாக் மாலா. ஏனோ அவளுக்கு பாடத்தில் கவனம் செல்லவில்லை.

பள்ளி மணி ஒலித்ததும் வகுப்பாசிரியர் உள்ளே நுழையவும் சரியாய் இருந்தது. எல்லாரும் நல்ல பரீட்சை எழுதுங்கன்னு வாழ்த்தைச் சொல்லிவிட்டு அனைவருக்கும் வினாத்தாள்களை கொடுத்துவிட்டு, வகுப்பறையில் அங்கும் இங்குமாய் சுற்றிக் கொண்டிருந்தார்.

அனைத்து மாணவர்களும் எழுதி முடித்து விடைத்தாள்களைக் கட்டிக் கொடுத்துவிட்டு வெளியே சென்றார்கள். மாலாவும் காயத்ரியும் வெளியே வந்தனர். மதிய உணவிற்கு விடுதிக்குப் போகுமுன் கொஞ்ச நேரம் மரத்தடியில் அமர்ந்தனர். “நீ எப்படி எழுதி இருக்கடி.. தேறுமா தேராதா” என்று சிரித்துக்கொண்டே மாலா கேட்டாள். அவளை நிமிர்ந்து பார்த்த மாலா எதுவும் சொல்லவில்லை. அவள் கண்கள் மட்டும் கலங்கி இருந்தது. “உனக்கு என்ன ஆச்சு.. ஏதோ சரி இல்லை. என்னன்னு சொன்னாதானே தெரியும்.

நான் கூட நீ பரிச்சைக்கு பயந்து தான் இப்படி இருக்கன்னு நினைச்சா.. இப்பதான் பரீட்சை முடிஞ்சிடுச்சி இல்ல இப்ப எதுக்குடி உம்முனு இருக்க?” அப்படின்னு மீண்டும் மீண்டும் கேட்கவும் அழத் தொடங்கி விட்டாள் மாலா.

“அச்சச்சோ நான் எதுவும் தப்பா சொல்லிட்டேனா. இப்போ ஏன் அழற. என்ன ஆச்சு சொல்லு. எனக்கு வருத்தமா இருக்குடி. என்ன ஆச்சு?” என்று நிலா வலியுறுத்திக் கேட்கவும்.. கண்களைத் துடைத்துவிட்டு யாருகிட்டயும் சொல்லிடாத என்று சொல்லிவிட்டு பெரிய மாலா சொல்ல தொடங்கினாள்.

உனக்கே தெரியும்லடி.. நம்ம ரெண்டு பேருக்கும் கணக்கு கொஞ்சம் தகராறுன்னு.. அன்னிக்கு வகுப்புல நம்ம

கணக்கு வாத்தியாரு சொன்னார்ல,

யாருக்கெல்லாம் கணக்கில் சந்தேகம் இருக்கோ அவங்க பரிச்சைக்கு முன்னாடி என்கிட்ட வந்து கேட்கலாம்னு. அதனால நான் போன வாரம் அவர்கிட்ட ஒரு சந்தேகம் கேட்கலாம்னு போனேன்டி..என்று சொல்லும் போதே அவள் உடல் சிலிர்ப்பதை உணர்ந்தாள் காயத்ரி.

மெல்ல அவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள். சந்தேகம் சொல்லிக் கொடுக்குற சாக்குல என் கையை தடவினார். நான் கூட ஏதோ தெரியாம பட்டிருக்கும்னு.. நினைச்சேன். ஆனா அதுக்குப்பிறகு என்கிட்ட தவறாக நடந்து கொண்டார்.

“எதுக்கு இவ்வளவு கஷ்டப்பட்டு கணக்கு படிக்கற..நீ மட்டும் நான் சொல்ற மாதிரி செஞ்சா உனக்கு முழு மார்க் நான் போடறேன்னு..” சொன்னார். அதெல்லாம் எனக்கு வேண்டாம் சார்னு சொல்லிட்டு நான் ஓடி வந்துட்டேன்.

அதிலிருந்து என்னை பார்க்கும் போதெல்லாம் என்னைத் தொந்தரவு செய்கிறார். எனக்கு ரொம்ப பயமா இருக்குடின்னு சொல்லி மாலா அழவும், காயத்ரிக்கு வந்ததே கோபம்.. வாடி நம்ம ஹெச்.எம். கிட்ட கம்ப்ளெயிண்ட் பண்ணலானு கையைப் பிடித்து இழுத்தாள்.

வேணாம் காயத்ரி.. உனக்கே தெரியும் எங்க அப்பா அம்மா என்ன கஷ்டப்பட்டு வயக்காட்டுல வேலை செஞ்சு இங்கே படிக்க அனுப்பிருக்காங்க. இந்த விஷயம் வெளியே தெரிஞ்சா அவங்க அவமானம் தாங்க மாட்டாங்க. இந்த பிரச்சினையை

எப்படி சமாளிக்கிறதுன்னு தெரியல என்று கண் கலங்கினாள் மாலா.

“சரி அழாதே.. யோசிச்சி முடிவு செய்வோம். இப்போ வா. போய் சாப்பிடலாம். காலையிலயும் நீ ஒழுங்கா சாப்பிடலன்னு” மாலாவை விடுதிக்கு அழைத்துப் போனாள். “உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு” என்ற குறளுக்கு உதாரணமாக காயத்ரி இருந்தாள்.

பள்ளி முடிந்து இருவரும் விடுதிக்கு வந்தார்கள். காயத்ரியிடம் மனசுவிட்டு சொல்லி விட்டதாலோ என்னவோ மாலா உறங்கிவிட்டாள். ஆனால், காயத்ரியின் தூக்கம் போயிற்று. இந்தப் பிரச்சினையை எப்படி சமாளிக்கலாம் என்று பலவாறு யோசித்தாள்.

காய்த்ரி வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைதான். ஆனால் அவளுடைய வீடு தொலைவில் இருப்பதால் அவளும் விடுதியில் தங்கி படித்துக் கொண்டிருந்தாள். விடுதியில் சேர்ந்த நாள் முதலாகவே அவளுக்கு மாலாவிடம் ஒரு தனிப் பிரியம். இருவரும் இணை பிரியாத நண்பர்கள் ஆகிவிட்டார்கள். இரவு முழுவதும் இந்தப் பிரச்சினையை எப்படி சமாளிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த நிலாவிற்கு ஒரு யோசனை வரவும் உதட்டில் புன்னகையோடு உறங்கிப் போனாள்.

மறுநாள் எப்பொழுதும் போல பள்ளிக்குக் கிளம்பினார்கள். செல்லும் வழியில் காயத்ரி அந்த யோசனையை மாலாவிடம் சொன்னாள்.மாலா முடியவே முடியாது என்று மறுத்தாள். இதை இப்போது நீ செய்யாவிட்டால் உனக்கு ஏற்பட்ட இதே நிலைமை நாளைக்கு இன்னொரு தோழிக்கும் நடக்கும். அது உனக்கு சம்மதமா? என்று கேட்கவும் சிறிது தயக்கத்துடன் மாலா ஒத்துக்கொண்டாள்.

அன்று மாலை பள்ளி முடிந்ததும் கணக்கு வாத்தியார் இருக்கும் அறைக்கு மாலா சென்றாள். அவளுடைய கைப்பையில்

காயத்ரியின் கைபேசி ரெக்கார்டிங் செய்யும் பட்டன் ஆன் செய்யப்பட்டு

கேமரா லென்ஸ் மட்டும் சிறுதுளை வழியே தெரியும்படியும், கைபேசி வெளியே தெரியாதபடி ஏற்பாடு செய்து அவளை அனுப்பியிருந்தாள் காயத்ரி. வசதியில்லாத வீட்டுப்பெண் என்பதால் அவளிடம் கைபேசி இருக்கக்கூடும் என்ற ஐயமே வராது.

எப்பொழுதும் போல தன்னுடைய லீலையை வாத்தியார் காட்ட, எப்பொழுதும் போல வாய் திறவாமல் மௌனத்தில் அழுதபடி நின்றுவிட்டு

மாலா வெளியே வந்து விட்டாள்.

வக்கீலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் தனது அப்பாவிற்கு போன் செய்து நடந்ததைச் சொன்னாள் காயத்ரி. அவள் தைரியத்தை மெச்சிய அவளின் அப்பா, உடனே வருவதாகச் சொன்னார். தலைமை ஆசிரியர் அறையில் காயத்ரி, அவளது அப்பா, மாலா அனைவரும் நடந்ததைச் சொல்லி ஆதாரத்தைக் கொடுத்தனர். இந்த விஷயம் வேறு பிள்ளைகளுக்கு நடக்காமல் இருக்க உடனடியாக அந்த ஆசிரியரைப் பணி நீக்கம் செய்யும்படியும், அப்படிச் செய்யவில்லை என்றால் சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்றும் சொல்லவும், நேர்மையான அந்த தலைமை ஆசிரியர் தனது வருத்தத்தைச் சொல்லி உடனடியாக அந்த ஆசிரியரை பணி நீக்கம் செய்துவிட்டார்.

கண்களில் நீருடன் நடந்த அத்தனையும் கவனித்துக்கொண்டிருந்த மாலா தனது தோழியை ஆரத்தழுவிக் கொண்டாள்.

இனி நிம்மதியாகப் பள்ளிக்கு வரலாம் என்று பெருமூச்சு விட்டபடி அவள் கைகளைக் கோர்த்தபடி இருவரும் விடுதிக்கு நடந்து நிம்மதியாகச் சென்றார்கள்.

# இரா. மதிராஜ் கவிதைகள்

பகலில் பரபரப்பாகயிருக்கும்
அதே சாலையில் தான்
மரத்தின் கிளைகள்
ஒன்று சேர்ந்து ஆக்கிரமித்திருந்தது...
நிலவின் புகைப்படமாய்
இரவில்
ஓர் வித்தியாசம் தான்
வெளிச்சத்தின் தீவிரம் இப்போது இல்லை
இரவின் கவிதையை ரசிக்க முடிகிறது

பிடித்து வைத்த நீரை அல்ல...
தண்ணீர் குழாயில்
வீணாகும் நீரையேக் குடிக்குறது...
காட்டு க் குருவிகள்...

சாலைகளின் பிரிவுகளில்
சந்திப்புகளில்
தவறாமல் நிற்கிறார்கள்
சமூகத்தால் கைவிடப்பட்டவர்கள்...

இப்போதுக் குற்றவாளிக்
கூண்டில் நிற்கும் நான்
தவறு ஏதும்
செய்யவில்லை என
நிரூபிக்க தான் முடியவில்லை,
சாட்சியங்கள் தான்
தற்போதில்லை....
ஒன்று அவர்கள் இல்லை
இருந்தாலும் ஒன்று சேராமல் இருக்கிறார்கள்....

கவிஞர்.இரா.சீ.பாலகுமார்

# துளிப்பாக்கள்

பிரியாணிச் சுவை
விருந்தினர்கள்உண்டு
இளைப்பாறுகிறார்கள்
முகமதியர் திருமணம்.

மூன்று இட்லி
ஒரு வடை காலைச் சிற்றுண்டி
வயிறு நிரம்புகிறது

அளவு சாப்பாடு
மதிய வேளைக்குப் போதுமானது
அலுவலகப்பெண்கள்.


குழிப்பணியாரங்கள்
மாலைவேளையில் உணவகங்களில்
பசியாறிடும் மக்கள்.

பகலில் தூக்கம்
இரவெல்லாம்கண்விழித்துவேலை
தகவல் தொழிலகம்

அயர்ந்த உறக்கம்
சட்டென்றுக் கலைந்ததுநள்ளிரவில்
மின்வெட்டின்தாக்கம்

ரஜிதா அரிச்சந்திரன்

# ஏதிலியாகும் ஆளுனர்..



ஆளுக்கு ஒருநீதி தந்தே
அவனிமீதில் அவலத் தைதந்தே
ஆளுகின் றஆதியா னவனே
ஆளுகைதான் சரியாநீ கூறு
பாழாக்கி விடநீபோட் டதிட்டம்
நாளும்கொல் லுதேநா ளுமிங்கு
ஆழாக்கி விடஉலகில் அன்னை
பாடும்பாட் டைஅழிக்கி றாய்நீ

கந்தகம்கக் கும்பொழுதில் நீயோ
படைத்தாய்சி லரைமலர்பூக் கின்ற
அந்திமாலை படைத்தாய்சி லரினை
அடையாளம் நீகேட்டால் தருவேன்
இந்திரனைப் போல்சிலரும் தேய்ந்த
சந்திரனைப் போல்சிலரும் புவியில்
மந்திரத்தை ஓதுவாரும் இங்கே
மனதினைகல் லாக்கித்தான் வாழ

தந்திரத்தை பரப்பி தப்பி ஓடி
தலைமறைவாய் சிலருமிங் குலவிட
உந்தித்தள்ளும்பசியாலைவார்
உருமாறி விதியென்னும் தீயால்
அந்திமத்தை நாடுமிளை யவரும்
அருவமாய்ய லையும்ஆத்மநிழல்
வந்தனைசெய் தலையறியா யோநீ
வாட்டியலைக் கிறாய்நல்லோ களினை

தினம்தினம்ப சியால்வாடும் குழந்தை
இறப்பைநோக் கிச்செல்லஇங்கே உனக்கு
மனமிரங்கா மல்திருட்டு செய்யும்
அரக்கர்தம் பாவம்போக்க பாலால்
கனதியான குளிர்த்திஅதில்நீயோ
மயங்கிப்போய் கூடுகிறாய் பாதை
தனைநீமறந்தெம்மை வாட்ட
நாமோமனதாலுன்னை வேண்ட

இரக்கமில்லா அரசுபோலே ஆனாய்
இறைநீயும் அதனாலே உலகில்
அரக்கரும்தம் குணத்தாலே எழும்ப
அங்கங்கள் நடுங்கிடத்தான் மனிதர்
வரங்கள்கேட் கிறாருன்னிடத்தில்
வடிவாய்அனுபவித்தாய் போதும்
நரரையும் கொஞ்சம்பார்த்திடுவாய்
அல்லனநீக்கி நல்லன வழங்கு

தன்வேலை மறந்தடுத்த வரினை
பார்த்துப்பார்த் துபிரட்டும் பேயாய்
நன்றும்தீ துமறியா மலிங்கே
நடித்துதிரிவ துபோல்ந டியாதே
துன்பக்கே ணியில்உ றைந்தே
துயரத்தைதட் டிவிட்டு வதைத்தால்
இன்பன்இ றைவன்என்றிடாதே
ஏதிலியென்றிடுவாரே கவனம்



திருமதி சாந்தி சரவணன், சென்னை

## "உதிர்த்துவிடு"

பகை என்னும் நஞ்சை
நெஞ்சில் சுமக்கும்
உனக்கு
உதடுகளில் மட்டும் உறவு எதற்கு?
உதிர்த்துவிடு

நிவேதிகா பொன்னுச்சாமி

## கடைசி மனிதன்

சொற்சாம்பல் பொதிந்து
கொல்லாமல் கொள்ளும்
தேடல் முடிந்து போன
தேம்பல் வடிந்த மனதின்
கடைசிக் குரல்

இக்கடைசி மனிதனின்
எஞ்சிய சொட்டு
இரத்தத்திலும்
உறைந்து கிடக்கும்
ஓர் இனத்தின்
ஒடுக்கப்பட்ட குமுறலையும்
துடைத்தெறிந்திட்டா
உயிர் குடித்திட துணிகிறீர்கள்?

மரணமது மடி தொடும்
வேளையிலும்
இப்பிரபஞ்ச பெருவெளியில்
எங்கோ ஓர் கடைக்கோடியில்
இயற்கையை நோக்கி
கேட்டிடத் துடிக்கும்
நசுக்கப்பட்ட ஓர் நாதியின்
குரலாய் நைந்து கிடக்கிறது
இக்கடைசி மனிதனின்
கடைசிக் குரல்..



# அன்பு மரம் – ஒற்றைக்கொப்புப் பாடசாலை

டீன் கபூர்

மழைக்காலம் வரும்போதெல்லாம், கிராமத்துக்கு முன்னாலே நின்று கண்ணை மூடுகிறேன். தூறல் ஆரம்பமாகும் அந்த நிமிடம், என்னுள் ஒரு பாடசாலை விழித்துக் கொள்கிறது.

ஒற்றைக் கொப்பாக இருந்த கொய்யாமரம், இப்போது என் கனவுகளில் ஒரு பாடசாலை ஆகிறது. மண் மணக்கும் வகுப்பறை, கிளைதோறும் எழுத்துக்கள் தொங்கும் கரும்பலகை. மாணவர்களுடன் நானும் சேர்ந்து ஓர் இருபது பேர். சுற்றிலும் சத்தமில்லாத சிரிப்புகள். ஓர் ஆசிரியர் எங்கள் மேல் புன்னகையுடன் பார்க்கிறார்.

அந்த ஆசிரியர் நான்தான் என்பதை, நினைவுகள் மறைத்துவைக்க முயல்கின்றன. ஆனால், என் குரலில் ஒளிந்து கிடக்கும் பாடங்கள் என்னை விலக்க மறுக்கின்றன.

"கண்பொத்தியாரே... காதடைச்சாரே... எத்தனை முட்டை விட்டாய்?"

பிள்ளைகளின் குரல்கள் மரக் கிளைகளில் ஒலிக்கின்றன. மண் மேல் வரைந்த கோடுகள்தான் எங்கள் கணக்குப் புத்தகம். கொய்யாப் பழங்களை எண்ணியபடி, பெருக்கலையும், வகுப்பையும் கற்றோம்.

நாட்கள் சென்றன. மரத்தின் கீழ் நான் விடைகண்ட கனவுகள், அரச பாடசாலையின் சுவரில் ஒட்டப்பட்டன. ஆனால், ஒவ்வொரு வகுப்பினதும் முடிவில், எனது பிள்ளைப்பருவப் பாடசாலை எனக்குள் ஒரு அழைப்பை இசைத்துக்கொண்டே இருந்தது.

ஒருநாள், விடுமுறை நேரத்தில் நான் கற்ற பாடசாலை சென்றேன். பாடசாலை இப்போது மூடப்பட்டிருப்பது போல இருந்தது. ஆனால், மரம் மட்டும் நிற்கிறது — கொய்யா இலைகளோடு, சிறு பழங்களோடு.

அதன் கீழ் அமர்ந்தபோது, சில சத்தங்கள் மீண்டும் எழுந்தன. ஒரு சிறுவன் ஓடி வந்து, "மாமா, நீங்களும் பாடம் சொல்லுவீங்களா?" என்று கேட்டான்.

அந்த நாளில், மரத்தடியில் ஒரு வகுப்பு துவங்கியது. பழைய பாடசாலை மறுபடியும் விழித்தது. நான் மறுபடியும் ஆசிரியர் ஆனேன்.

மரத்தின் கீழ் மாறாத ஒரு பாடசாலை இன்னும் வாழ்கிறது. அது மண்ணில் கட்டியதல்ல. மனதில் வளர்ந்தது.

"பாடசாலை எப்போ துவங்கும் மாமா?" என்று தினமும் கேட்கிறான் அந்தச் சிறுவன். அவனது கண்களில் என் பிள்ளைப் பருவம் இரட்டைபா பிரதியாக ஒளிர்கிறது. வண்ணமயமான பைலோடு, பழைய நாவல்கள், சுருள் காகிதங்கள், மரத்தடியில் சாய்ந்த நான்கு மாணவர்கள்... இன்னொரு நாள், இன்னொரு வகுப்பு.

அந்த மரத்தடியில், ஒரு வார்த்தைதான் இல்லாமல் போனது — 'அனுமதி'. யாரும் எதிர்பார்க்கவில்லை, ஆனால் யாரும் எதிர்த்தும் பார்க்கவில்லை. மாணவர்கள் வந்தார்கள். பாடங்கள் தொடர்ந்தன. சில சமயங்களில், பாடங்களில் கவிதைகள் புகுந்தன.

"மழை வந்தால், எந்த இலை கீழே விழும்?" என்று நான் கேட்டேன்.

சிறுவன் சிரித்தபடி சொன்னான், "அந்த மழையைத் தான் இப்போ நாங்கள் வரைந்து கற்கிறோம்."

தினமும் ஒரு காகிதம். தினமும் ஒரு வண்ணம். மரத்தின் அடியில் வகுப்பறை, கிளைகளில் சத்தமில்லாத மணி. ஒரு நாள், அருகில் உள்ள அரச பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் வந்து நின்றார். நான் தயக்கமாக எழுந்தேன்.

"நீங்கள் தான் அந்த பழைய மாஸ்டரா?"

"இல்லை... நான் பழைய மாணவன். கொஞ்சம் மறந்துபோன பாடங்களை நினைவு கூர வந்தவன்தான்."

அவர் சிரித்தார். "பிறகு, இங்கயே ஒரு வகுப்பறையைத் துவங்கலாமே. மரத்தின் கீழ் பாடசாலை. குழந்தைகளின் மனதில் நிற்கும் வகுப்பறை."

ஒரு குழந்தை ஒரு நாள் கேட்டது:

"மாமா, இந்த மரம் தான் உங்கள் பாடசாலையா?"

நான் மெதுவாக சொன்னேன்:

"இல்லை மகளே... இது தான் என் வாழ்க்கையின் முதல் கவிதை."

மரத்தின் கீழ் வகுப்புகள் ஒவ்வொரு நாளும் ஒரு புது பயணமாகவே இருந்தது. மழை பொழியும்போது கிளையின் கீழ் கூடவே உட்கார்ந்து பாடல் பாடினோம். வெயில் ஊட்டும் நேரத்தில் ஒரு பழம் விழும்போது, அது எப்போதும் ஒரு குழந்தையின் கரத்தில் விழும். பழங்களும் பாடங்களும் கலந்து ஓர் ஊட்டமாய் ஆனது.

ஒரு வெள்ளிக் கிழமை அன்று, ஒரு வயதானவர் மோப்பம் பிடித்து வந்தார். அடையாளம் தெரியாமல் நின்று, சத்தமின்றி என் வகுப்பைக் கேட்டார். வகுப்பு முடிந்ததும் நெருங்கி கேட்டார்:

“நீ தான் ஞானப்பழம் மாஸ்டரா?”

நான் ஆச்சரியமாய் பார்த்தேன். “நான் அவரைப் பார்த்ததில்லை. ஆனா அவர் என்னுடைய ஆசிரியர்தான்.”

அவர் சிரித்தார். “நானே ஞானப்பழம். நீயா அந்தக் கொய்யாப் பழத்துக்கு பெயர் வைத்த மாணவன்?”

மரத்தின் மீது நான் வைத்திருந்த ஒரு சிறிய தகட்டில் எழுதியிருந்தது: “அன்பு மரம் – ஒற்றைக்கொப்புப் பாடசாலை” அதைத் தட்டி, அவர் பார்வையை கீழே கொண்டு வந்தார்.

“நீயா இதை வளர்த்தது?” என்றார்.

“இல்லை மாஸ்டர்... இது தான் என்னை வளர்த்தது.”

அவர் நெகிழ்ந்தபடி மரத்தின் அடியில் அமர்ந்தார். ஒரு குழந்தை ஓடி வந்து, “ஓலைச் சுவடிகளைப் படிக்கலாமா?” என்று கேட்டது.

அவர் சொன்னார்: “ஓலையை மட்டும் படிக்காதீங்க... ஓலையின் வாசலில் நிற்கும் காலத்தையும் படிங்க!”

அந்த நாள் முதல் ஞானப்பழம் மாஸ்டர் வழக்கமாக வந்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர் கதை சொல்வார். கிளவி வடை சுட்ட கதை, காகம் நீர் நிறைந்த குடம்.

பிறகு ஒரு நாள், அரசு பாடசாலையில் இருந்து அதிகாரிகள் வந்தனர். மரத்தின் கீழ் வகுப்பு நடத்தும் எண்ணம், அவர்கள் வரை சென்று விட்டது.

“இது அதிகாரபூர்வமல்ல” என்றார்கள்.

நான் சும்மா நின்றேன். மரமும் சும்மா நின்றது.

ஆனாலும் பக்கத்தில் ஒரு மாணவி கூறினாள்:

“இந்த மரம் தான் எங்க பாடசாலை. இந்த ஆசிரியர்தான் எங்க புத்தகம்.”

சில வாரங்களுக்கு பின், அதே மரத்தின் அடியில் ஒரு பெயர்ப்பலகை:

அன்புமரம் அரசு முன் பாடசாலை

முன்னோடி ஆசிரியர்: ஞானப்பழம் – முன்னாள் மாணவர்: ஞாபகப்பழம்.

ஆரம்பித்தது ஒரு கவிதையாக. வளர்ந்தது ஒரு பாடசாலையாக.

முடிந்தது ஒரு மரத்தின் பெயருக்குள் ஒரு தலைமுறை வாழ்ந்து முடிந்த கதையாக.

புதிய பெயர்ப்பலகை பதிந்த நாளில் பாடசாலை முழுவதும் பெருநாள் மாதிரியே இருந்தது. இடுக்குகளில் மலர் தூவல்கள், மரத்தின் மேல் பச்சை வண்ணக் கொடி, பழைய மாணவர்கள் பலர் வந்து நின்றனர் — சிலர் கையில் புத்தகம், சிலர் கையில் நினைவுகள்.

ஆனால் ஞானப்பழம் மாஸ்டர் மட்டும் அந்த நாளில் வரவில்லை.

“அவர் வருவார்,” என்று குழந்தைகளிடம் நான் சொன்னேன்.

மாலை வரை காத்திருந்தோம். பின்னர் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. மாஸ்டர் பேசவில்லை. அவரது மகன் தான்.

“அப்பா இன்று அதிகாலை தூங்கிக் கொண்டே போனார்.”

மரத்தடியில் குழந்தைகள் சும்மாயிருந்தார்கள். சத்தம் இல்லாத வகுப்பறை, சத்தம் மிகுந்த சோகமாயானது.

ஒரு பையன் எழுந்து வந்து கேட்டான்:

“அவர் இல்லாமலே பாடசாலை எப்படிச் சாத்தியமாம் மாமா?”

நான் ஒரு பார்வையை மரத்தின் மீது வீசினேன்.

“மரங்களைப் போல, நல்ல ஆசிரியர்களும், அவர்கள் வாழ்ந்த நாள்களுக்கு மட்டுமல்ல; வாழ்ந்த மனங்களுக்கு நினைவாக இருக்கிறார்கள்.”

அடுத்த நாள், மரத்தின் அடியில் ஒரு சிறிய தூணில் ஒரு கருப்புப் பலகை பதிக்கப்பட்டது:

“ஞானப்பழம் நினைவே, இம்மரத்தின் ஒவ்வொரு இலையிலும் பசுமையாக இருக்கிறது.”

பள்ளி தொடர்ந்தது. பாடங்கள் வெறும் பாடங்கள் அல்ல.

ஒரு மாணவியின் கண்களில் தண்ணீர் வந்தபோது, நான் கூறினேன்:

“இது ஒரு பாடமில்லை... இது ஒரு பரம்பரை கற்றுக்கொடுத்த வாழ்வியல்.”

அவள் சொன்னாள்:

“அப்புறம் நீங்கள் கற்பிக்காத நாள் இருக்குமா?”

நான் சிரித்தேன்.

"நான் மரமாக மாறினால் கூட, என் கிளைகளில் நீங்கள் பாடம் கற்றுக்கொள்வீர்கள்."

இப்போது அந்த மரத்தின் அடியில் ஒரு பெரிய இருப்பிடம் கட்டப்பட்டுள்ளது.

மரத்தின் கிளைகளுக்கு நடுவே ஒரு பழைய கரும்பலகை.

"கண்பொத்தியாரே... காதடைச்சாரே... எத்தனை முட்டை விட்டாய்?"

பக்கத்தில் எழுதியிருக்கிறது:

"இங்கு தொடங்கியது ஒரு ஆசிரியனின் கனவோடு ஒரு பாடசாலை.... இன்று அது ஒரு தலைமுறையின் ஆரம்பம்."

நாள் கடந்து, புதிதாக அமைந்த இந்த பாடசாலை கடந்த காலத்தின் நினைவுகளுடன் நீடித்து வந்தது. மாணவர்கள் மாற்றம், வளர்ச்சி, மற்றும் பாடங்களை முற்றிலும் புதிய பார்வையில் கற்றுக்கொண்டனர். அந்த மரத்தின் அடியில் மர்மங்களும், கதைகளும், சிரிப்புகளும் எதையும் மீறி விதைத்தன.

கண்களை மூடினேன். ஆழமாக சுவாசித்தேன். மரத்தின் மணக்காற்றில் உறுதி செய்யப்பட்ட நினைவுகள் அனைத்தும் நம் உடலில் உணரப்படுகின்றன. ஒரு புது வகுப்பு இப்போது தொடங்கியிருக்கிறது. அந்த வகுப்பின் ஆசிரியர்கள், மாணவர்களாக மாறி, பழைய மரம் அதன் கல்வி மரபுகளை தாங்கிக் கொண்டு அடுத்த தலைமுறைக்கு பரிமாற்றி விடும்.

பழைய பார்வைகளின் குறும்படங்களாக இருந்த கதை, இப்போது புதிய பக்கம் தோன்றுகிறது. அந்த மரம், அங்கே வாழ்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோருமே ஒரு விதமான சிறுகதை போல, அடுத்த அத்தியாயத்தின் எழுத்தாளர்களாக மாறிவிட்டனர்.

ஒரு அத்தியாயம் முடிந்தது, ஆனால் மரத்தின் கிளைகளில் இன்னும் புதிய கதைகள் எழுதப்படுகின்றன.

நாம் அனைவரும் மரத்தின் கிளைகளாக, அதன் நிழலாக, அதன் காற்றில் கலந்துகொள்கின்றோம். ஆசிரியரின் பாடங்கள் இப்போது எங்கும், அனைவரிடமும், காற்றின் மேல் மிதந்து செல்லும்.

மரத்தின் அடியில் அந்தப் பாடசாலை, அந்த ஆசிரியர்கள், அந்த மாணவர்கள், இப்போது அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக எங்கும் பரவிக் கொண்டிருக்கின்றனர்.

## கி.கவியரசன்

எதன் மீது நான் பரிதாபம் கொள்வது
திரும்பத் திரும்ப
இந்த பாறைகளின் மேல்
வந்து முட்டிக் கொள்ளும்
அந்த அலைகளின் மீதா
எத்தனை முறை
எவ்வளவு ஆக்ரோஷமாக
வந்து அந்த அலைகள் அடித்தாலும்
தாங்கிக் கொள்ளும் இந்த பாறைகளின் மீதா

குடத்தினுள் ஒரு கோலிகுண்டு
தவறி விழுந்து
உருளத் தொடங்கியதும்
எழுகிறது கடந்த காலத்தின் சத்தம்

இடியும் மின்னலுமாய் ஒரு பேய்மழை
அனைத்தையும்
அடித்துக் கொண்டு
வாசலுக்கு வந்த பலத்த காற்றினுள்
அவளைத் தேடிப் பார்க்கிறேன்
சிக்கவேயில்லை
சூரைக் காற்றுக்கும்
அசையாத
கல் நெஞ்சம் அவள்
என் பெருத்த தனிமையில்
என் நினைவுகளில்
இருப்பதையெல்லாம்
தள்ளியும் உருட்டியும் உடைத்தும் விட்டு
போதை தலைக்கேறிய குடிகாரனைப் போல்
வீதியில் சத்தமிட்டுக் கொண்டு
திரிகிறது காற்று.....



# ஆண் என்ற அகங்காரம்......

**தௌபீக் முஹம்மது நவீத், இலங்கை**

ஒவ்வொரு ஊர்லயும் இப்டி இருக்கும்

"நான் ஆம்பள அவளுக்கு நான் ஏன்

உடுப்பு கழுவி குடுக்கணும் விறகு தறிச்சு குடுக்கணும்"

இப்படி எத்தனை பேருடைய மனதில் ஆணவத்துடன் கூடிய எண்ணம் இருக்குமோ தெரியாது....

இங்கு பலர் மனைவிக்கு ஒத்தாசையாக இருந்து உதவிகள் செய்வதை அவமானமாக நினைக்கிறார்கள் இன்னும் பலர் வேறு யாரும் தன் மனைவிக்கு தான் உதவி செய்வதை கண்டால் தன்னை கீழ்த்தரமாக "என்னடா இவன் பொண்டாட்டிக்கு வேலை சென்றான்" என்று பழிப்பார்கள் என்று மற்றவர்களுக்கு பயந்து உதவிகள் செய்வதில்லை இதுவே கசக்கும் உண்மை.

இவ்வளவு காலமும் உங்கட உடைகளை கழுவிய மனைவி இப்ப சுகம் இல்லாம இருக்கும் போது அவளின் உடைகளை கழுவுவதில் என்ன அவமானம் உள்ளது உங்கள் உயிர் தானே.....

இவ்வளவு காலமும் உங்களுக்காக நேரத்துக்கு சாப்பாடு செய்து அதை நீங்கள் உண்பதற்காக தயார் செய்யும் அவள் ஒரு நாள் ஓய்வெடுக்க நீங்கள் சமைப்பதில் என்ன வெக்கம் இருக்கப் போகிறது.....

ஒரு நாள் நீங்கள் அவளுக்கு உணவு பரிமாறுவதில் என்ன கீழ்த்தரம் இருக்கப் போகிறது.....


கடைக்குச் சென்று அவளுக்காக உடைகள் வாங்குவதிலும் அவளுக்காக பொருட்கள் வாங்குவதிலும் அப்படி என்ன பேரிழப்பு இருக்கப் போகிறது.....

ஒரு நாள் அவளின் ஆடைகளை அயன் செய்து கொடுப்பதிலும் அவளை தயார் செய்வதிலும் என்ன மானப் பிரச்சினை இருக்கப் போகிறது.....

அவள் செய்த சமையலை பாராட்டுவதிலும் அவளின் அழகை வர்ணிப்பதிலும் அப்படி என்ன ego இருக்கப் போகிறது......

மனைவி என்பவள் வேறு யாருமில்லை உங்களையே நம்பி கிடக்கும் ஓர் உயிர் கணவன் மனைவிக்கு வீட்டிலும் சரி வெளியிலும் சரி ஒத்தாசையாக உதவியாக இருப்பதில் என்ன வெக்கம் அவமானம் ego இருக்கப் போகிறது அவள் உங்கள் உயிர் தானே

அவள் பெண் நீங்கள் ஆண் என்ற ஆணவத்தை விட்டு விடுங்கள் அவள் உங்களில் சரிபாதி என்று அவளை எப்போதும் போற்றுங்கள்.



**ஐ.தர்மசிங், நாகர்கோவில்**

# கறை

என் ஆடையின் மீது
களங்கமாய் படிந்தது
கவனக்குறைவாக
அந்தக் கறை

கையால் மறைத்தேன்
சலவை செய்து பார்த்தேன்

ஒருவனுக்குத் தெரிந்தது
ஒவ்வொருவராக கடந்து
இரகசியம் பரசியமானது

விழிகளால் கெஞ்சினேன்
விட்டு விட போராடினேன்
விடுபட முடியவில்லை

நானே முந்திக் கொண்டேன்

உன் கருவிழி அருகில்
கரும் புள்ளி என்றேன்
கண்ணாடியும் கையுமாக
அலைகிறான்
ஒருவன்

உன் சொற்களில்
பிழை என்றேன்
பழுதின்றி சொற்களை
உச்சரிக்கும் பயிற்சியில்
ஒருவன்

ஒவ்வொரு வார்த்தையையும்
இரு தடவை உச்சரித்தேன்
காதுகளை செப்பனிடும்
சிகிட்சை முயற்சியில்
ஒருவன்

உன் நடை
தடுமாறுகிறது என்றேன்
ஊன்று கோலோடு
நடை பயிற்சியில்
ஒருவன்

என் எதிரில் வருவோர்
இப்போதெல்லாம்
ஏனோ
பாதையை மாற்றி
பயணிக்கிறார்கள்.

# வாழ்க்கைத் தத்துவத்தை எடுத்துரைக்கும் சுந்தரிமணியனின் ‘கடைக்குட்டி’ சிறுகதை- ஒரு பார்வை

**திரு. சமயக்கண்ணு, மதுரை**

‘சுந்தரிமணியன் அவர்கள் எழுதிய, ‘கடைக்குட்டி’- என்ற சிறுகதையின் முடிவு சொல்லவொணாச் சோகத்தில் ஆழ்த்திட வைத்தது என்றால் மிகை அன்று.

பர்வதம் அம்மாவின் கடைசிப் பிள்ளை தான் கடைக்குட்டி, பெயர் கார்த்திக். கொஞ்சம் கோபக்காரப் பிள்ளை.

அப்பப்ப அம்மாவோடு...‘குழம்பு சரியில்லை...’‘கூட்டு சரியில்லை’ என்று சண்டை போடுவான்...எத்தனை பேர் இருந்தாலும் ஏன் அம்மா போல் யாருமுண்டோ! என்று பாசத்தையும் பொழிவான்.

பர்வதமும் அவனைப் பதிலுக்கு விட்டுக்கொடுக்காமல் கொஞ்சி மகிழ்வாள். அது கண்டு அவனது தங்கை வான்மதிக்குப் பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரியும். இருப்பினும் தாயும் மகனும் பாசப்பினைப்பில் எடுத்துக்காட்டாய் இருந்தார்கள்.

கார்த்திக் அதிகம் படிக்கவில்லை. டிப்ளமோ படித்துள்ளான். நல்ல நட்புச் செல்வம் பெற்றவன். ஒரு நாள் அவன் நண்பன் சுரேஷ் ஓடிவந்து, தன் தாய்க்கு மருத்துவம் பாக்கக் காசு இல்லை என்றும் உதவி வேண்டும் என்றும் ஓடி வந்தான். அம்மாவிடம் காசு கேட்டும் கிடைக்கவில்லை. அண்ணன் ஒருவனிடம் ஆயிரம் பெற்று...உதவிக்கரம் வேண்டி வந்த நண்பனின் துயரம் போக்கினான். காலம் உருண்டது.

கார்த்திக்கு அவன் கற்ற டிப்ளமோ படிப்புக்கு ஏற்ப வேலையும் சென்னையில் கிடைத்தது. வேலை கிடைத்து சென்னை சென்ற போதும் தாய்ப்பாசம் அவனைத் தொடர்ந்து விரட்டியது பர்வதமும் கடைக்குட்டியாம் கார்த்திக்கை பார்க்காமல் இருக்க முடியவில்லை.

கார்த்திக் உழைத்துக் கை நிறைய ஊதியம் பெற்றான். அந்தக் காசில் அனைவருக்கும் ஆடை...மற்றும் அண்ணன் பிள்ளைகளுக்கு விளையாட்டுச் சாமான்கள் என்று வாங்கிக் கொடுத்து மகிழ்ந்தான்.

இரண்டு வருடத்தில் பர்வதம் நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டாள். தாயின் கண்ணோடு கார்த்திக்குக் கல்யாணம் நடக்கவில்லை. அண்ணன்கள் அது கண்டு வருந்தி...அதற்கு ஓர் நடவடிக்கை எடுக்கத் தன் பெரியப்பா மகள் ஜெயசுதாவை பொறுப்பேற்க வைத்தனர்.

அவளும் அந்த வேண்டுதலுக்கு ஏற்ப ஒரு பெண்ணைப் பார்த்து வைத்து விட்டு...கார்த்திக் வந்து பெண்ணைப் பார்த்து பிடிக்குமா? வேண்டாமா என்று சொல்லட்டும் என்ற எண்ணத்தில் கார்த்திக்குத் தகவல் கொடுத்தனர். அவன் வந்து பார்த்து விட்டு அந்தப் பெண் வேண்டாம் என்று கூறி விடவே..., “சரி இன்னொன்றை பார்ப்போம்”என்று விட்டுவிட்டனர்.

ஆசிரியர் இங்கே ஒருவர் வாழ்வில் என்னென்ன.. எப்படி நடக்கிறது என்பதைப் படக்காட்சி போல் அனைவர் உள்ளத்திலும் பதியும்படி மிகவும் சுவை படத் தீட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது அன்றோ!

கார்த்திக்கு வயதாகிக் கொண்டே இருக்கிறதென்று அண்ணன்மார்களுக்கும் விசனம் இல்லாமல் இல்லை. ஆகையால் ஜெயசுதா என்ற தன் பெரியப்பா மகளும்.... அவளுக்கே உரிய எடுத்த காரியத்தை முடிக்காமல் விடுவதில்லை என்ற பிடிவாதம் அவள் மனதைப் புரட்டி எடுத்ததால்....மீண்டும் கார்த்திக்கு அழைப்பு விடுத்து.... ஏற்கனவே அவன் பார்த்து வேண்டாமென்று அவன் மனம் ஒதுக்கிய....அந்த சுப்பு லட்சுமியையே மீண்டும் காட்டி....மணம் முடிக்க அழுத்தம் தந்தாள்.

கார்த்திக் மனமும் ‘கூன்’ என்றாலும்...‘குருடு’ என்றாலும்...கட்டிகிட்டவன் பிழைத்துக்கொள்வான் என்ற ஆன்றோர் அறிவுரைப்படி ஒருவன் துணைவி பெறுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை வெட்ட வெளிச்சமாக விளக்கி இருப்பது கண்டு.....தானும் சுப்புலட்சுமியை மணந்து கொள்ள எப்படியோ இசைந்தான்.

தாய் உயிரோடு இருந்திருந்தால் அவள் பார்வை மணப்பெண்ணைத் தேர்ந்தெடுப்பதில் எப்படி இருந்திருக்கும்.....

என்ன இருந்தாலும் ஜெயசுதா இரண்டாம் தர சொந்தம் தானே என்றும் அவன் எண்ணாமல் இல்லை. இங்கே ஆசிரியர் உலக நடப்பை உரித்து வைத்த விதம் எவரும் பாராட்டும் விதத்தில் இருக்கிறதன்றோ!

காலம் உருண்டது. ஆரம்பத்தில் சுப்புலட்சுமியுடன் அவன் இல்லற வாழ்வு இனிமை நல்கியது. ஆண் மகவு ஒன்றை அடுத்த வாரிசாக இருவரும் பெற்றேடுத்தனர்.

காலப்போக்கில் சுப்புலட்சுமி சுபாவம் வெகு மட்டரகமாய் மாறி விட்டது...

கார்த்திக் தன் சொந்த பந்தங்களுக்கு எதுவும் கொடுக்கக்கூடாது என்ற பொறாமை உணர்வைப் பெற்றெடுத்தாள். அதனால், எப்போதும் “கர்.. புர்”.. வாழ்வில் புழுதிப் புயல் வீசியது...

ஒருவன் வாழ்வு எவ்வளவு இக்கட்டானது என்றாலும் வாழ்க்கைப் படகு கவிழாது என்பதே உண்மை.

அதே நேரம் துணைவி தொங்கு மூஞ்சியோடு.. கடுகடுப்பாய் எப்போதும் சூது வாதுடன் சுழன்றால்..... வேதனைப் புயல் வீசி....சம்பந்தப்பட்ட குடும்பத் தலைவனை அலைக்கழித்தே கொன்றுவிடும் என்பதற்கு ஏற்ப.....

“கடைக்குட்டி” கார்த்திக் மனைவியின் கொடுசூரிக் குணத்தைத் தாங்க முடியாது....

தன் உயிருக்குத் தானே முடிவுரை எழுதிட முயன்றான்.

நள்ளிரவு தரும் இனிய சூழலில்....

விஸ்கியுடன் நஞ்சு பெய்து குடித்தான்.. குடியும் கெட்டது.

எப்படியோ தான் ஆடாவிட்டாலும் தன் சதை/உடம்பு ஆடும் என்பார்கள் அல்லவா ஆன்றோர்!

அப்படித் தான் கார்த்திக் என்ற “கடைக்குட்டியின்”... அண்ணன் தனக்கு வந்த அந்தத் துயரத் தந்திச் செய்தி படித்து தடம்புரண்டு அழுதான்...“என்னடா... தங்கம்.... இந்த முடிவை ஏன் எடுத்தாய் என் உடன் பிறப்பே என்று கதறினான்.

எதற்கழுகிறார்? கணவன் என்ற செய்தி அறிந்த நொடியில் கார்த்திக் அண்ணியும் உருண்டு புரண்டாள்.

ஆசிரியர் தீட்டிய இச்சிறுகதையில் இது ஓர் தலை சிறந்த கதை என்றால் மிகையாகா....

ஆம்! வாழ்க்கை என்பது....


வாழ்க்கைத் துனண நலம் தரும் அன்பிலும்....

கஷ்டகாலத்தில் கூட....மனம் சிதையாது...

அவள் தரும் ஆறுதலிலும்..

பொறுமையிலும் பின்னிப் பிணைந்த ஒன்றாகும்!

அதை விடுத்து மனைவியின் அடிப்படை வாழ்க்கைக் குணாதிசயங்கள் மாறுபட்டு அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டால் வாழ்வே கடைக்குட்டி கார்த்திபோல் அழிந்துவிடும் என்ற இந்த உண்மைத் தத்துவத்தை மிகவும் அழுத்தமாகப் பதிவிட்ட ஆசிரியப் பெருந்தகை அவர்களின் இப்படைப்பு சமூகநலம் காக்கும் சிறுகதைப் படைப்பு என்றால் மிகையாகாது.



அ. அமுல்ராஜ்

# பெருங்காட்டை வளர்த்த சொற்கள்

தொட்டிலில் ஆழ்ந்து உறங்கும்
குழந்தையின் பேரமைதியில் கிடந்த மரத்தடியில்
நீண்ட நாட்களுக்குப்பின்
மழைக்காலப் பொழுதொன்றில்
சந்தித்தோம்.

தூரத்தில்
கால்நடைகள் தலைதூக்கிப் பார்த்துவிட்டு பின்
தலைகவிழ்த்து அதன் வேலையைத் தொடர்ந்தன.

ஆடுகளின் கழுத்தில்
அசைத்தாடும் மணிகளின்
டிங்ங்..டிங்க்... என்ற ஒலிகளின்
இசைவூடாக, குருவிகளின்
சந்தமும் சேர்ந்து
நம் இருவரின் காதுகளிலும் பாடலை இசைத்தன.

நீண்ட நேர
கனவு போலிருந்தது
அன்றைய பொழுது.

கூடிய மேகங்கள் கலைவதைப்போல
எழுந்து நடந்தோம்.

நம் சொற்களை எல்லாம்
மரத்தடியிலேயே விட்டு விட்டு.

என்றாவது வரும்
பெருமழையொன்றில்
பாறைகளிலிருந்து துளிர்க்கும்
சிறு விதைபோல
நம் சொற்களும் துளிர்க்கலாம்;
பெருங்காடாகி அசையலாம்.

அதற்காகவே
இருக்கட்டும் நமது சொற்கள்.

**அன்பாதவன்**

# வேட்டை

*மலைக்குகைக்காரன் நாகரீகனாக அடுக்ககங்கள்!*

*புரவி வேகம் போதாதோ... புல்லட் பயணம்*
*இரதமும் பல்லக்குமே கார்க்கடனாய் முகிழ்த்தவை!*
*கூட்டுக்குழுவாய் கனியும் கிழங்கும் ருசித்து*
*ஓடை நீர்ப் பருகி*
*ஓடு விலங்கில் அம்புச்செருகி*
*வேட்டுவம் நிகழ்த்திய மூதாய் மறைய*
*சமவெளி மனிதரும் சக்கரப் புரட்சியும்*
*தனிச்சொத்தாய்ப் பெருக...*
*பெரும்பொருள் காக்க பிறந்தது கற்பு!*
*தேவையெனில் ஆண்மகனைத்தேர்ந்தெடுக்கும்*
*தாய்வழி போய்*
*தினவெடுத்த உடம்புக்கு சுகம் வழங்க*
*தேவரடியார்ச் சமூகமென*
*பாதை அமைத்து வீதி சமைத்தவன்*
*நாகரீகன்*
*நாடோடியாய்த் திரிபவனோடு*
*ஏது பிரச்சனை ஏங்கல்ஸீக்கு?*
*குடும்பம் ; தனிச்சொத்து ; அரசு*
*பெருங்காளான் குடையாய் விரிய*
*மார்க்ஸின் கல்லறை மறுபடி திறக்கும்...*

*"ஆடுகளைத் தான் கொல்வார்கள்*
*சிங்களக்களை அல்ல"*
*அண்ணல் காட்டிய வழி!*
*வேர்க்கடலையும் ஆட்டுப்பாலில்*
*திருப்தி கண்டது - மகாத்மா மனம்*
*நீர் தொட்டான்; ஒயினானது*
*அப்பம் பிட்டான்; பசி தீர்த்த ரூசி!*
*தேவகுமாரனுக்கு மாயவிரல்கள்!*
*சித்தர்களுக்கு தான் வாழத் துணிகள்*
*பிறர் வாழ தழைகள்!*
*மாட்டுகறி மனிதர்மீது கொலைவெளிபூண்டவர்*
*அருந்தும் பசும்பாலிலில்லையோ பசுக்குருதி?*

*பாலையிலும் கொல்வதில்லை ஒட்டகங்களை...!*
*பீட்சாக்காரன் ட்ரெட்மில்லில் வியர்க்க*
*கூழ்குடிப்பவன் தென்றல் தாலாட்டும்*
*தென்னைவரப்பில்*
*நாடோடியாய்த் திரியவன் பசிக்கேது*
*சைவம்? அசைவம்*
*ஆரியபவனின் டிகிரி காப்பியொரு சுவை!*
*கட்டன்சாயாவின் துவர்கசப்பு சுகம்!*
*இட்லியும் இடியாப்பமும் தான்*
*நீராவி என்ஜினின் முன்னோடி...மறுப்பீரா...?*
*ஊற்று நீரை அள்ளிக் குடித்தவன் அறிவானா*
*பாட்டில் நீரை பணங்கொடுத்து வாங்குவானென்று?*
*கள் சுவைக்கெதிரானதன்றோ 'டாஸ்மாக்'*
*போத்தல்கள்*
*மரக்கறிக்கேன் இத்தனை அசூயையும் வெறுப்பும்*
*மாம்சம் ருசிப்பவர் மீது?*
*தாவரங்களுக்கும் உயிர் உண்டென*
*விருதுவாங்கியவன் முட்டாளா...*
*புல்மேயும் மான்களைப் புலி தின்னும்*
*கடற்காகங்கள் மிதக்கலாம் ஜலசந்தியில்*
*கரைப்புறாக்களுக்கு என்ன வேலை?*
*மீனங்களின் பெருவினா...!*
*எலுமிச்சை சாறு இளநீர் நீர்மோரின்*
*இருப்பை அழித்தன கோக்கும் பெப்சியும்*
*நத்திங் அஃபிசியல் அபவுட் இட்*
*தாமிரபரணி பாலாற்று ஊற்றை*
*உறிஞ்சிக்குடிக்கும் அமெரிக்க குழாய்கள்!*
*மருந்தே உணவு; உணவே மருந்தென்ற;*
*மலைச் சித்தனும் தரை வந்தால்*
*பரோட்டா ச்சால்னா தான்!*
*கொல்லிகள் யாவும் கொன்றது பூச்சிகள் தாமா?*
*மலைநாட்டில் மிளகு ; பெங்களூர் வெல்லம்*
*ஆந்திரத்து காரம்*
*யாவும் செரிக்க தமிழ் மண்ணின் ரசம்!*
*தீநுண்மி சூறாவளியை எதிர்கொண்டவை*
*நாடோடி தேசத்தின் பஞ்ச பூதங்கள்*
*இஞ்சி, எலுமிச்சை, வெற்றிலை, மஞ்சள் மிளகு!*
*எண்ணெய், சர்க்கரை, தேங்காய் வணிகத்தில்*
*உழுகுடி வயிற்றலடிக்கும் வணிக அரசியல்...*
*கோதுமைக்குடிகளின் போராட்டம்*
*தொடர்கிறது கடுங்குளிரில்... தலைநகரில்*
*அரிசியின் பேரரசியல் பேசவேண்டிய சங்கதி*



கவிஜி

## எட்டிப்பார்த்த நான்

சாகசம் நிறைந்த காட்டுக்குள்
ஒற்றைப் பாதம் நுழைகிறது
நீண்ட நதியின் சிறு வளைவு
சிரிக்கிறதோ
திடுக் திருப்பமென எங்கிருந்தோ
வந்து விழுகிறது பேரருவி
இரவுக் கருந்துகள்களை
கடித்து விழுங்கும்
நட்சத்திரங்களில்
நீல வான ஊஞ்சல்
மான் ஒன்று துள்ளி வந்து
தன் புள்ளிகளை
எண்ணும் காட்சியை
யாரோ வீசுகிறார்கள்
மயில் தோகை மினு மினுங்க
இசைத்த நல்வயிரமென
இனிய பூக்கள் முகம் பார்க்க
தங்க புற்கள் ஒவ்வொன்றாய்
ஆகாச யாழை மீட்டும்
மலை உச்சியை மிதக்க செய்கின்றன
நிறம் மாறிக் கொண்டேயிருக்கும்
தூர நிலத்தில்
பச்சை வனமொன்றை வளர்ப்பவர்
எட்டி பார்ப்பதற்கும் அனுமதிக்கிறார்
சட்டென்று ஒற்றை பொத்தானை
யாரோ அழுத்துகிறார்கள்
காடலையும் திரை
காணாமல் போகிறது
எட்டிப்பார்த்த நான் என்னவானேன்...!

பாக்யபாரதி, தருமபுரி

## எதார்த்தம்

வார்த்தைகளின்
அழுத்தத்தால் மிதிபடும்
நிசப்தமானது
அடியோடு
தொலைந்து போவதில்லை!
தன்னை
ஆசுவாசப்படுத்திக்
கொண்ட பிறகு
மீண்டெழுந்திடும்
புவியின் ஆயுளை
நீட்டிக்க வேண்டி..!

ரகுநாத் வ, மதுரை

# நூதன யுகம்

செயற்கைப் புல்வெளியோடு
பச்சையம் கூறுகின்றன
அலுவலகத் தரைகள்

அறுத்த மூங்கில்கள்
ஈசானி மூலையில்
சாய்ந்து நிற்கின்றன

குட்டையிருந்த இடத்தில்
நீர்த்தொட்டி இமைக்கிறது

கூடு இருந்த இடத்தில்
கூண்டிலிருக்கின்றன
பறவைகள்

நகரமயமாதலெனும்
நூதன யுகத்தில்

கம்பெனி மரமாகியிருக்கிறது
காட்டிலிருந்த அரசமரம்!





# அநாதையாக்கப்படும் அன்பு

**கமலினிகதிர், சுவிற்சர்லாந்து**

விண்ணுந்தில் பறந்து கொண்டிருந்த ரஞ்சித்தின் மனம் விண்ணுந்தை விட வேகமாகப் பறந்து தான் பிறந்த மண்ணைத் தழுவியது.பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் என்று தலைப்பாக் கவிஞன் பாடல் வரிகள் அவன் மனவானில் நடனமாடிக் கொண்டிருந்தன.இந்த மந்திரச் சொற்கள் அவனைக் கட்டிப் போட்டிருந்தன. அவை மட்டுமா?தங்கை வெண்ணிலாவின் தொலைபேசி உரையாடல்கள் மீண்டும் மீண்டும் வருடிய வண்ணம் இருந்தன.

¨எவ்வளவு என்மேல் அன்பு வைத்திருக்கிறாள். அம்மாவுக்குப் பிறகு என்னை மிகவும் நேசிப்பவள் வெண்ணிலா மட்டுந்தான்.அண்ணா,அக்கா,தம்பி என்று எல்லோருமே என்னுடன் அன்பாயிருந்தாலும் வெண்ணிலா மட்டும் மிக நெருக்கமாக இருப்பதாக நான் உணர்கிறேனே'

எல்லோருமே தங்களுடன் வந்து தங்குமாறு சொன்னாலும் வெண்ணிலா ¨அவர்களை நம்பாதேங்கோ.வந்து என்னோடை இருங்கண்ணா.நீங்க ஒரேயடியாய் வாறீங்க என்று தெரிந்தால் உங்கடை முழுக்காசையும் கறக்கப் பார்ப்பாங்க. ஏமாந்திடாதீங்க அண்ணா.கவனமாயிருக்க வேணும்'

என்று அவள் அடிக்கடி சொல்லும்போது அவளது அக்கறையில் நெகிழ்ந்து போனான் ரஞ்சித்.

சூரிச்சிலிருந்து பிரங்பேர்ட் போய்; அங்கிருந்து ஒன்பது மணித்தியாலம் நாற்பத் தைந்து நிமிடங்கள் விண்ணுந்துக்குள் கழிக்க வேண்டிய நிலை. அறுபத்தைந்து வயதுவரை வேலை செய்திருக்கலாம்.ஆனால் ஓய்வு பெற்றபின் தாயகத்தில் போயிருக்க வேண்டும் என்று நினைத்த பலர் திடீரென மரணத்தைத் தழுவி யதைப் பார்த்தபின் தாயகம் போவதைத் தள்ளிப்போட ரஞ்சித்தின் மனம் இடந்தரவில்லை. சமீபத்தில் வேலை வேலையென்று ஓடி இரண்டு வீடுகளை வாங்கியபின் ஒரு இரவு நெஞ்சுக்கை அடைக்குதென்று சொன்னவன் அப்படியே

செத்துப்போன செய்தி வந்தபோது கெதியில் அங்குபோய் வாழ வேண்டுமென்ற நினைவு ரஞ்சித்திற்கு மாற்ற முடியாததாய் போய்விட்டது.தடுத்துவிடுவார்களோ என்ற பயத்தில் வீட்டில் யாருக்குமே தெரியாமல் அறுபத்திரண்டு வயதிலேயே பென்ஷனுக்கு எழுதிப்போட்டு எல்லாம் வலு கெதியில் முடிவடைய இலங்கை போவதற்கு விமான ரிக்கட் எடுத்தபிறகே வீட்டில் பேச்சை ஆரம்பித்தான்.அவன் நினைத்தது போல் மனைவி பிள்ளைகள் சாதாரணமாக எடுக்கவில்லை.

¨என்னப்பா சொல்றீங்கள்? வேலையை விட்டிட்டீங்களா?வரவேண்டிய முழுக்காசும் எடுத்திட்டீங்களா?முழுவதையும் அங்கை கொண்டு போகப் போறீங்களா?' மனைவியின் கேள்விக்குப் பதில் கூறத் தெரியாமல் தடுமாறிய ரஞ்சித்திடம் 'முழுக்காசையும் அங்கை கொண்டுபோய் என்ன செய்யப் போறீங்க?இரண்டு பொம்பிளைப்பிள்ளைகள் இருக்கிறது நினைவிருக்கா?'

தட்டுத் தடுமாறி 'அங்கை வீடு கட்டப் போறன்' ரஞ்சித் சொல்லி முடிக்கு முன்னே வசந்தியுடன் சேர்ந்து பிள்ளைகளும் கத்தத் தொடங்கினார்கள். ¨அப்பா!உங்களுக்கென்ன விசரா?நாங்க என்ன அங்கை போயிருக்கப் போறமா? அல்லது நீங்க அங்கேயே இருக்கப் போறீங்களா?அம்மாட்டையோ, எங்களிட்டை யோ சொல்லாமல் இதென்னப்பா புதுப் பழக்கம்?'

பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறி¨என்ரை காணிக்கை எனக்கென்று ஒரு வீடு கட்ட வேணும் என்றது என்ரை கனவு. நான் ஆருக்கும் என்ரை காணியைக் குடுக் கப்போறேலை. அதிலை வீடு தான் கட்டப்போறன்.கொஞ்சக்காலம்; அங்கை வாழப் போறன்.நீங்களும் அங்கை வந்து வந்து போகலாமே.¨என்றான் ரஞ்சித்.

¨உப்பிடித்தான் சொல்லுவீங்க.கடைசியில் எல்லாம் உங்கடை தங்கச்சிக்கு குடுத் திடுவீங்க. மந்திரிச்ச கோழி மாதிரி அவ சொல்றதுதான் உங்களுக்கு வேத வாக்கு. என்னைப் பற்றித்தான் யோசிக்கேலை. பிள்ளைகளைப் பற்றியுமா யோசிக்கத் தெரியாது.கடைசியிலை வீடுமில்லை,காணியுமில்லை.அதுதான் நடக்கப் போகுது. காணியை அவவுக்கு குடுக்க எல்லா சொன்னனான்'

கோபத்துடன் வசந்தி கத்தினாள்.

¨உங்களுக்கு எங்களை விட அவையா முக்கியம்?அப்பிடியெண்டா போங்கோ. நாங்க ஒண்டும் அங்கை வரப்போறதில்லை.எங்களுக்கு அங்கை ஏன் போக வேணும்?அங்கை போய் இருந்திட்டு பிறகு வருத்தம் அதுயிது என்று சொல்லிக் கொண்டு இங்கை வராதேங்கோ. வந்து அம்மாவைக் கஷ;டப்படுத்தாதேங்கோ. போனால் அப்பிடியே போங்கோ.'

மகள் சொல்லவும்

'இதுக்குத்தான் என்னட்டை 5000பிராங் இரண்டு மாதத்துக்கு முதல் வாங்கி னீங்களோ?அப்ப வீட்டுவேலை ஆரம்பிச்சாச்சு. உங்களை நம்பி நான் உழைச்ச காசுகளையும் உங்களிட்டை குடுத்திட்டு இந்தப் பிள்ளைகளுக்கு நான் என்ன செய்யப் போறன்?உங்கடை காணியை அவைக்கு குடுங்கோ என்று தானே சொன்னன்.இப்ப அந்தக் காணியிலை வீட்டையும் கட்டிக் குடுக்கப் போறீங் களோ? எல்லாம் ஒழிப்பு மறைப்பு.சொந்த மனைவி பிள்ளைகளிடமே நம்பிக்கை யில்லை.இனி உங்களோடை கதைத்துப் பிரயோசனமில்லை.எதுவும் உங்கடை காதிலை ஏறாது.நினைச்சபடி என்னத்தையோ செய்யுங்கோ. பட்டால் தான் தெரியும்'

கோபத்துடன் அறைக்குள் சென்று கதவைப் படீரென சாத்தினாள்.கணவனின் துரோகம் அவளை நோகச் செய்தது. எதுவுமே செய்ய முடியாத ஆற்றாமை, நிராகரிக்கப்பட்ட அன்பு அவளது கோபத்தின் வெளிப்பாடாய் அறைக்கதவை சத்தத்துடன் அடித்து மூட மட்டுமே அவளால் முடிந்தது.

இவ்வளவு தூரம் மனைவி பிள்ளைகள் எடுத்துச் சொல்லியும் இத்தனை வருடகாலம் வாழ்ந்த மனைவியை நம்ப மனம் இடங்கொடுக்கவில்லை.சொந்த மண்ணும் இரத்த சொந்தமுமே சொர்க்கமாகத் தெரிந்தன.விமானத்திலிருந்த அமைதியை மீறி மனம் பரபரத்தது.¨எப்போது தாய் மண்ணை மிதிப்பேன். சகோதரர்களைப் பார்ப்பேன். எந்தவிதக் கவலைகளும் இல்லாமல் வெளி விறாந் தையில் உட்கார்ந்து நேரம் போவது தெரியாமல் ஊர்க்கதை கதைப்பேன். நண்பர்களுடன் ஊர் சுற்றுவேன்'என்ற எண்ணத்தைத் தொடர்ந்து ¨எத்தனை நண்பர்கள் இப்ப அங்கு இருக்கிறார்களோ?என்னை யார் நினைவு வைத்திருக் கிறார்களோ?எங்கே இருக்கிறார்களோ?எத்தனைபேர் உயிரை போர் அரக்கன் காவு கொண்டானோ?விட்டுவந்த இடத்தில் தேடுகிறது மனசு.¨கூட்டை விட்டு ஓடிப் போன பறவைகள் கூடு தேடி வருவது போல் இல்லாமல் நாடு விட்டோடி காலம் கடந்து வருகிறோம்'மனம் சமாதானத்தைத் தேடி ஏமாந்தது.

ஒன்பதே முக்கால் நேரப் பயணம் மிக நீண்டதாக அலுப்புத் தட்டியது.ஏதோ ஒரு திரைப்படத்தைப் போட்டு நேரத்தைக் கடத்தினான்.தற்காலத் திரைப்படத்தில் மனம் ஒட்டாமல் கண்கள் திரையைப் பார்க்க மனம் பிறந்த ஊரான கட்டுடை யைப் புரட்டிக் கொண்டிருந்தது.வயல்வெளிகளில் மனம் தளர்நடை போட்டது. பச்சைப்பசேலென்று வயல் கண்ணுக்குள் சிரித்தது.நெற்கதிர்களைச் சுமந்து சரிந்த பயிர்கள் மனதை வருடிச் சென்றன.இப்ப எத்தனை வயல்களில் வீடுகள் வந்து விட்டதோ?பயிர்க்காணிகள்,தோட்டக்காணி கள் எல்லாம் யார்யாருக்கோ விற்கப்பட்டு வீடுகள்,தொடர் அங்காடிகள் வந்துவிட்டதாகக் கேள்விப்பட்டிருக் கிறான்.வயல் வரம்புகளில் நண்பர்களுடன் அரட்டை அடித்தபடி நடந்த நினைவுகள் இனித்தன.மருதடியான்

வாசலிலும்,சுதுமலை அம்மன் கோயில் மண்டபத்திலும் உட்கார்ந்து அந்த சுத்தமான வயல் காற்றை உள்ளுக்குள் இழுக்கும் உணர்வே தெரியாமல் கதை பேசிய நினைவுகள் இன்றும் தன் மனதை தாலாட்டுவதை அவனால் தவிர்க்க முடிவதில்லை.போர் ஆரம்பித்த பிறகு கூட பொம்மர் வானத்தில் சுற்றுவதைக் காணும்வரை தாங்கள் அரட்டை யடித்ததை நினைவு கூர்ந்தான். சுவிசில் இதுகளையெல்லாம் நினைக்கக் கூட நேரம் இருந்ததில்லை.வேலை வேலை என்று ஓடியே காலத்தை விழுங்கி விட்டோமே என்று ரஞ்சித் இப்போது நினைக்கின்றான்.ஓடிவந்த இடத்தில் அகதியென்ற பெயருடன் உழைத்து உழைத்து தாயகத்தில் அம்மா,அப்பா, தம்பி,தங்கையென்று உதவித் தங்களுக்கு ஒரு துணையைத் தேடி அவர்களை அழைப்பதில் பெரும் கடன் சுமை சுமந்து அந்தக் கடனை அடைக்க ஓடியோடி உழைத்து. பிறகு சுவிசில் வதிவிட உரிமைக்காய் காத்திருந்து பொருளாதார நிலையை உயர்த்தி நிமிரும் போது பிள்ளைகளும் வளர்ந்து தலைமுடியும் நரைத்து விட்டது.ரஞ்சித் மட்டுமில்லை. அந்தக் காலகட்டத்தில் வந்த இளைஞர்கள் எல்லாருடைய வாழ்வும் அதுதான். திரும்பிப் பார்க்கும் போது இழந்துவிட்ட இளமைக்கனவுகள் ஏளனமாக நகைப்பது போல் ஒரு பிரமை.

விமானப்பணிப்பெண் உணவுத் தட்டுகளை நீட்டவும் உண்பதற்குத் தயாரானான். தமிழரின் உணவான சோறும், மைசூர்பருப்புக்கறியும்,கீரையும் வேறு ருசியில். மனதை நிறைக்கவில்லை.ஏதோ சாப்பிட்டு முடித்தபோது மனதில் மனைவியின் சமையல் ருசி வந்து போனாலும் ‘விட்டிட்டு வந்தாச்சு.இனி எப்ப போகப் போறேனோ.போனாலும் சொல்லிக் காட்டிக் கொண்டிருப்பினம் தாயும் பிள்ளைக ளும்’மனதிற்குள் சொல்லிக் கொண்டான். தாயகத்தில் மட்டுமே தான் பாதியில் விட்டிட்டு வந்த சந்தோஷம் இருப்பதாக அவனுள் ஊறும் நினைவுகளிலிருந்து அவனால் விடுபட முடியவில்லை.வாலிப பருவத்தில் நண்பர்களுடன் ஊர் சுற்றிய சம்பவங்கள்,அடித்த அரட்டைகள்,தியேட்டரில் படம் பார்த்த நிகழ்வுகள்,பள்ளியில் பெண்பிள்ளைகளை சைற் அடிச்சு அவர்களுக்குப் பின்னால் திரிவதிலேயே நேரத்தைக் கழித்தது என்று நினைக்க நினைக்கத் தெவிட்டாத நினைவுகள்.நண் பர்களின் காதலுக்குத் துணை போனது,அந்தப் பெண்களின் வீட்டார்கள் சிலரிடம் அடி வாங்கியது,காதல் தோற்றபோது அவர்களைத் தேற்றியது,படிக்காமல் சுற்றித் திரிந்து அப்பாவிடம் அடி வாங்கியது என்று மனத்தடாகத்தில் தடம் பதித்த நிகழ்வுகள் ஏராளம்.திருமணமான புதிதில் தன் மனைவியுடன் இவற்றைப்பகிர்ந்து கொண்டாலும் திரும்பவும் அவற்றை மீட்டெடுத்துப் பேசி அனுபவிக்க காலம் வாய்க்கவேயில்லை.பணத்தேவைகளுக்காய் கணவனும்,மனைவியும் சந்திக்கவே நேரம் இல்லாமல் ஓடியோடி உழைத்ததில் தற்போது வெறுமை மட்டுமே மிஞ்சியது. இரண்டுமே பெண் பிள்ளைகளாக இருந்ததில் அவர்கள் தங்களுக்கு ள்ளேயே பேசிச் சிரித்து ஒன்றாய் வெளியில் சுற்றித் தமக்கான ஒரு வட்டத்தை உண்டாக்கிக் கொண்டு இருந்ததுதான் தனக்கு ஒரு வெறுமையை உண்டாக்கி யதோ? என்று இப்போது அவனுக்குத தோன்றியது.அப்போது கூட மனைவியும் அதே மனநிலையில் இருந்திருப்பாள். அவளும் இயந்திரமாய்த்தான் அதுவும் பிள்ளை வளர்ப்பு என்ற இரட்டைச்சுமையைச் சுமந்து களைத்திருப்பாள் என்ற நினைவு அவனுக்குத் தோன்றவேயில்லை.

ரஞ்சித்தின் மனம் பின்னோக்கி ஓடிக் கொண்டிருந்தது.¨தங்கை வெண்ணிலா வுக்கும் எனக்கும் பன்னிரண்டு வயது வித்தியாசம்.அவளைத் தூக்கித் திரிந்த ஞாபகங்களே இன்னும் பசுமையாய் ஒட்டிக் கொண்டிருந்தன.அவளுடன் கழித்த நாட்கள் சொற்பம் என்றெ சொல்லலாம்.அவளுக்கு எட்டு வயதில் நாட்டை விட்டு வெளியேறியதில் சின்னஞ்சிறுமியாகவே நினைக்கத் தோன்றுகிறது.அண்ணா,தம்பி அக்கா என்று இருந்தாலும் வெண்ணிலாவின் மேல் ஒரு தனிப்பாசம்.அவளுக்கும் மூன்று பிள்ளைகள்.கணவன் யாழ் ரவுனுக்குள் ஃபான்,பிரிஜ்,ரீவி என்று மின்சாரப் பொருட்கள் விற்பனை நிலையம் சொந்தமாக வைத்திருக்கிறான்.கடையைப் பெருப்பிக்க பணம் அனுப்பியது நான்தான். அண்ணா குடும்பத்தோடு பரிசில் செற்றில் ஆயிட்டார்.எனக்கு சுவிஸ் போகப் பணம் தந்ததோடை சரி.நான் திருப்பிக் குடுத்திட்டாலும் அண்ணி அதையே சொல்லிக் காட்டிக் கொண்டிரு ப்பதால் உறவு தள்ளாடிக் கொண்டுதானிருந்தது.தம்பி அரசாங்க உத்தியோகம். அத்தான் பாங்க் மனேஜராக இருந்து ஓய்வு பெற்றிட்டார். அக்கா வசதியாய்த்தான் இருப்பா.இரண்டு பேருமே என்னிடம் காசு வாங்க மாட்டார்கள்.வெண்ணிலாவுக்கு கொஞ்சம் உதவினால் உயர்ந்திடுவாள்.நானும் வீட்டைக் கட்டினால் நிம்மதியாய் கொஞ்சக்காலம் அங்கை வாழலாம். பிறகு தேவைப்படாட்டி வெண்ணிலாவுக்கே விற்று பிள்ளைகளுக்கு காசைக் குடுக்கலாம்.என்ரை நோக்கம் தெரியாமல் மனிசியும் பிள்ளைகளும் குதிக்குதுகள்.’என்று நினைத்துக் கொண்டான்.

“எழுபதுகளில் பிறந்தவர்கள் எல்லாம் எங்களைப்போல நாட்களை வீணடிக் காமல் இரண்டு மூன்று வருடத்திற்கு ஒருமுறை தாங்கள் வசிக்கும் நாடுகளி லிருந்து சிங்கப்பூரிலோ,மலேசியாவிலோ சந்தித்து நட்பைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.ஆண்கள் மட்டு;மின்றிப் பெண்களும் சந்தித்து மகிழ்வது இயல்பாக நடந்து கொண்டிருந்தது.அவர்களைப் பார்த்து அறுபதுகளில் பிறந்த வர்கள் பொறாமைப்படவே செய்தார்கள்.பறப்பதே தெரியாமல் விமானம் முகில் களுக்குள் பறந்தபடி இருந்தது. நீண்ட நேரம் உட்கார்ந்திருந்து கால்கள் விறைத்தன.¨எப்படா இறங்குவோம்¨என்று ரஞ்சித்தின் மனம் பரபரத்தது.

மனதை வேறுதிசையில் திருப்பும் நோக்கத்துடன் போனில் டவுண்லோட் பண்ணி யிருந்த அ.முத்துலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பை வாசிக்கத் தொடங்கினான்.


வாசிப்பு என்பது அவனது மூச்சோடு கலந்திருந்தது. வம்சவிருத்தி என்ற அந்த நூல் 1996ம் ஆண்டு தமிழ்நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றிருந்தது.எத்த னையோ தரம் படித்திருந்தாலும் முதல்முறை படிப்பதுபோல் ஆர்வத்துடன் படிப்பான்.அதிறல் கிரகணம் என்ற கதை மறக்க முடியாமல் அவனோடு பயணித்துக் கொண்டேயிருந்தது. மீண்டும் மீண்டும் வாசித்தாலும் அலுப்பு தட்டுவதில்லை. அதில் கதாபாத்திரமான பஸ்மினா என்ற சிறுமி அவனை அலக்கழித்தபடியே இருப்பாள்.அந்தச் சிறுமியின் புத்திசாலித்தனமும் அவள் இறந்ததாகச் சித்தரித்ததும் இன்றளவும் அவனைப் பாதித்தபடியே இருந்தது. அந்தச் சிறுமி ஒரு வீட்டில் வேலை செய்தபோது வீட்டுக்காரருக்குத் தெரியாமல் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்ததாக வாசித்தபோது போர்க்காலத்தில் தாங்களும் உணவுக்கு ஏங்கிய நினைவுகள் மனத்திரையில் ஓடும்.இரண்டுமணி நேரத்தை வம்சவிருத்தி அபகரித்துக் கொண்டதில் நேரம் போனது தெரியாமல் போய்விட்டது. ‘ஊருக்குப் போனவுடன் யாழ் பொது நூலகத்தில் மெம்பர் ஆயிடவேணும்.இப்ப நுலகம் பவுண்டேசனில் நூல்கள் எடுக்கலாம் என்று யாரோ சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.அங்கேயும் போய்ப் பார்க்க வேணும்.ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை வாசிக்க வேணும். வயல்வெளியில் உட்கார்ந்து அந்தக் காற்றையும்,நூல்களையும் அனுபவிக்க வேணும்.’நினைவு நீண்டு கொண்டு போக விமானம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை அண்மித்து விட்டது என்று அறிவிப்பு அவனை பரபரப்படையச் செய்தது.கொழும்பில் நான்கு நாள் தங்கிவிட்டு புகையிரதத்திலேயே யாழ்ப்பாணம் பயணமானான்.

வெண்ணிலா வீட்டிலே அக்காவும்,தம்பியும் வந்து நின்று அவனை வரவேற்றது அவனுக்கு பெரிய மகிழ்ச்சியைத் தந்தது.நலம் விசாரிப்பு பரிசுப்பொருட்களைக் கொடுத்தது என்ற விடயங்கள் முடிய அக்காவும்,தம்பியும் விடை பெற்றார்கள். அடுத்தடுத்து நண்பர்களைத் தேடி சிலரைக் கண்டுபிடித்தாலும் அவனைப்போல் அவர்கள் சந்திப்பில் ஆர்வம் காட்டாதது அவனுக்கு ஏமாற்றத்தையே தந்தது. நலன் விசாரிப்புகளுடன் அவர்கள் உரையாடல் முடிவடைந்தது.வெண்ணிலாவும் தம்பி, அக்கா பற்றி குறை கூறிக் கொண்டேயிருந்ததில் அதுவும் அலுப்புத் தட்டியது. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சையோ என்று தோன்றியது. தன்னு டைய காணியில் வீடு கட்டுவதில் ஆரம்பத்தில் இருந்த மகிழ்ச்சி கொஞ்சம் கொஞ்சமாகக் காணாமல் போகத் தொடங்கியது.மண்ணும் மரங்களும் வெறுமனே நின்றன.வயல் வெளியோ,அம்மன் கோயில் மண்டபமோ,குயில்களின் குரலோசை யோ, தென்றல் காற்றில் இங்குமங்கும் தலையாட்டும் மலர்களோ மனதுக்குத் தென்பைத் தரவில்லை.

வெண்ணிலா அக்கா தம்பியிடம் போகாமல் தடுப்பதில் கவனமாக இருந்தாள். நாட்கள் நகர்வதாகத் தெரியவில்லை. ஊர்வதுபோல் உணரத் தன் முடிவு தவறு என்பதைக் காலங்கடந்து தெரிந்து கொண்டான்.வெண்ணிலா ரஞ்சித்துடன் இணைந்து ஒரு வங்கிக் கணக்கையும் தொடங்கினாள். ரஞ்சித்தின் மொத்தப் பணமும் இருவருக்கும் பொதுவானது. அக்காவிடம் ரஞ்சித் போனபோது

‘நான் சொல்றன் என்று குறை நினைக்காதை. வெண்ணிலாவை நம்பி மோசம் போயிடாதை.அவள் அம்மா அப்பாவைப் போல இல்லை.கவனம்.இவ்வளவுதான் சொல்லுவன்.’

என்று நீட்டி முழக்காமல் தன் கருத்தை சொல்லிவிட்டா. அப்போதும் ரஞ்சித்திற்கு உறைக்கவில்லை.வீடு கட்டும் வேலை ஆரவாரமாகத் தொடர்ந்தது.மாதங்கள் உருண்டோட வங்கிப் பணம் கணக்கு வழக்கின்றிக் குறைந்துகொண்டுவர தன் மதிப்பும் குறைவதை உணரத் தலைப்பட்டான். அப்போதுதான் தன் முடிவு தவறானதோ என்று நினைவு தலைகாட்டத் தொடங்கியது.¨சில உறவுகளிடம் சொல்லித்தான் உன் பக்க நியாயங்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் உன் மனதோடு போராடி அவர்களை விட்டு விலகுவதே நல்லது’என்றோ வாசித்த வரிகள் கண் முன்னே தோன்றி அவன் என்ன செய்ய வேண்டுமென் பதை வலியுறுத்திக்கொண்டிருந்தன.வீடு கட்டி முடியும்போது அந்த நிலமும் வீடும் வெண்ணிலா பெயருக்கு மாற்றப்பட்டிருந்தது.தன்னிடம் எப்போது கையெ ழுத்து வாங்கினார்கள் என்பதே தெரியாது அவனது மனம் மரத்துப் போய் வலித்தது.மனம் மரத்துப் போவதற்கு நோயும், மரணமும் தேவையில்லை. துரோகங்களும்,ஏமாற்றங்களும் போதும் என்பது வலிக்கச் செய்தது.வீடு கட்டும்போது சில அனுமதி பெறும் கடிதங்களுடன் வாசிக்காமல் கையெழுத்து போட்டது உறைத்தது.மனைவி கூறியது சரியென்பது விளங்கிய போது தங்கை யின் முகத்தில் இருளின் நிழல் படிந்திருப்பது போல் அவனுக்குத் தோன்ற ஆரம்பிக்க அந்த வீட்டில் மொழி மௌனித்து விட்டது. வார்த்தைகளைச் செல விட்டு தங்கையைக் காயப்படுத்தி விட வேண்டிய நிலை வந்து விடுமோ என்று அஞ்சினான்.தங்கையின் மேலிருந்த அன்பு,நம்பிக்கை உடைந்து மனம் நொருங்கி அவளின் கறுப்புப் பக்கங்கள், விகாரமான நடவடிக்கைகள் அவனைத் தடுமாற வைத்தன.தங்கையின் மனதில் அன்பை விதைக்காமல் அன்பைக் கொடுத்ததனால் இன்று தன் அன்பு அனாதையாக நிற்பதைப் பார்த்து வேதனைப்பட மட்டுமே முடிந்தது.தங்கையின் துரோகத்துக்குப் பிறகுதான் புரிந்தது அவள் தன்னை நேசிக்கவில்லை. பயன் படுத்த மட்டுமே செய்தாள் என்பது.சேர்த்து வைத்து கனவுகள் எல்லாம் ஒவ்வொன்றாக உதிர்ந்து விழ மனம் வெறுமையாய் அழுதது.குதூகலத்துடன் ஓடி வந்து அன்பையும் இழந்து ஒற்றையாய் அநாதையாய் நிற்பதுபோல் உணர்ந்தான்.




# உறவுப் பாலங்கள்

ஜூனியர் தேஜ்

தேஜ் வித்யா மந்திர், மெட்ரிக் பள்ளியில், கீழ் நிலை வகுப்பில் படித்து வரும் மகேஷ் உரத்த குரலில், தன்னை மறந்து "London Bridge is Falling Down...! Falling Down...!! Falling Down...!!!" என்று வெவ்வேறுத் தாள கதியில், குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் ராகம் போட்டுப் பாடிக் கொண்டிருந்தான்.

'நைட் ஷிப்ட்'டில் வேலைப் பார்த்துவிட்டு, விடிகாலை ஐந்து மணிக்குத்தான் வீட்டிற்கு வந்து படுத்த கருணாகரனுக்கு தூக்கம் கலைந்து விட்டது. கண் பிட்டுக்கொண்டது. மணலைக் கொட்டியது போல கண்கள் உறுத்தின. மிளகாய்த் தூள் கொட்டியது போல எரிச்சல் கண்டது. கண்களை மீண்டும் மூட முயற்சித்தான். நெற்றி நரம்புகள் வெடுக் வெடுக் என இழுத்து, கண்களுக்குள் குத்து வலி எடுத்துக் கண்ணீர் பிதுங்கி வெளியேறியது.

கண்களை அழுத்தித் துடைத்துக் கொண்டான். மீண்டும் கண்களை மூடி தூங்க முயன்றான். London Bridge is... என்று தொடர்ந்து பாடினான் மகன்.

நேற்றைக்கு முதல்நாளும் இதையேத்தான் பாடினான். நேற்றும் இதையேத்தான் பாடினான். நேற்றும் அதற்கு முந்தைய நாளும் கருணாகரனுக்கப் பகல் ஷிஃப்ட். இரவு நன்கு தூங்கி எழுந்துவிட்டதால் கண்களில் இந்த ரண வேதனைகள் எதுவும் இல்லை. மகனின் ரெய்ம்மும் அவனை பாதிக்கவில்லை. இன்று அவனை பாதித்துவிட்டது. காரணம், விடிய விடியக் கண் விழித்து வேலை செய்துவிட்டு வந்தவன் தூக்கம் கலைந்து கஷ்டப்படுகிறான். ரெய்ம் கர்ண கடூரமாக ஒலித்தது.

சமையலறையில் மணக்க மணக்கக் காலைச் சிற்றுண்டி தயார் செய்து கொண்டிருந்தாள் கௌசல்யா.

மகன் பல்வேறு டெஸிபிள்களில், பலமாய்ப் படித்துக் கொண்டிருந்த அந்த 'நர்ஸரி ரெய்ம்' கௌசல்யாவின் காதுகளைக் குளிர்வித்தன.

கௌசல்யா, ஆங்கில இலக்கியம் படித்தவள்.

இளங்கலை மற்றும் முதுகலை ஆங்கில இலக்கியத்தில் தங்க மெடல் பெற்றவள் அவள்.

பல்கலைக் கழகத்தின் ஆங்கிலத்துறை, 'ஸ்காலர்ஷிப்' அளித்து அவளை 'எம் ஃபில்' ஆராய்ச்சி மாணவியாக்கியது.

கவிதைக்காக இலக்கியத்துறையின் நோபல் பரிசு பெற்ற டி எஸ் இலியட் என்ற நிகரற்ற எழுத்தாளரின் Waste Land (களர் நிலம்) என்ற கவிதையின் உட்பொருளை ஆராய்ந்து ஆய்வுக் கட்டுரை தயாரித்தாள் கௌசல்யா.

ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்த அந்த நாள் கௌசல்யாவின் வாழ்வில் ஒரு பொன்னாள்.

❍ ❍ ❍

கட்டுரையின் நான்கு படிகளை, தேர்வுக்குழுவினர் நால்வரிடமும் சமர்ப்பித்துவிட்டு, அவர்களின் வாய்மொழித் தேர்வினை எதிர் கொள்ளத் தயாராக எதிரில் நின்றாள்.

“இந்திய உபநிடதங்களிலிருந்து, கணிசமான மேற்கோள்களைக் குறிப்பிட்டு, இலியட் அவர்களின் கவிதையோடு ஒப்பாய்வு செய்து மிகத் தெளிவாகக் ஒப்புமைப் படுத்தியிருக்கிறீர்கள். அது எவ்வாறு சாத்தியமாயிற்று.!” –

‘வைவா ஓசி’ எனப்படும் வாய்மொழித் தேர்வில், தேர்வுக் குழு உறுப்பினர்களின் சீனியர் ப்ரொபசர், ஆச்சரியம் முகத்தில் பிரதிபலிக்கக் கௌசல்யாவிடம் கேட்டார்.

“பற்பலப் பண்டிதர்களிடம் கேட்டு அறிந்து கொண்டேன். அந்தப் பண்டிதர்களின் பெயர்களை ”பார்வை நூல்கள் பகுதியில் குறிப்பிட்டிருக்கிறேன் ஐயா..”

“ஓ..! உபநிடதங்களில் பரிச்சயம் இருந்ததால், தாங்கள் இலியட்டின் இந்தக் கவிதையை ஆய்வுக்காக எடுத்துக் கொண்டீர்களோ?” இயல்பாகக் கேட்டார் மற்றொரு ப்ரொபசர்.

“மன்னிக்க வேண்டும், இந்திய உபநிடதங்களின் சாரங்களை வேத விற்பன்னர்களிடம் சென்று அறிந்துத் தெளிய வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டதே, டி எ இலியட் அவர்களின் களர் நிலம் கவிதையின் முடிவில் அவர் வைக்கும் முத்தாய்புதான் ஐயா..”

இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்காத தேர்வுக்குழு கௌசல்யாவை மிக்க மரியாதையுடன் பார்த்தது. கற்றவருக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பல்லவா..

❍ ❍ ❍

16ம் நூற்றாண்டில் எந்த இடத்தில் எடுத்து ஆராய்ந்தாலும், நூறு விழுக்காடு தூய்மையாக இருந்த இருந்த தேம்ஸ் நதி நீரின் தன்மையை எட்மண்ட் ஸ்பென்ஸர் ‘ப்ரொதாலமியன்’ என்ற கவிதையில் *Sweet thames* மற்றும் *cristal clear water* என்று வர்ணிப்பதற்கும்;

17ம் நூற்றாண்டில் மாசுபட்டுக் கிடக்கும் நிலையை டி எஸ் இலியட் வர்ணிப்பதற்கும் உள்ள தலைகீழ் மாறுதலை மிகச் சிறப்பாகக் கையாண்டிருந்ததைக் குறிப்பிட்டுத் தேர்வுக் குழுவினர் அனைவருமே கௌசல்யாவைப் பாராட்டியதும் இப்போது நினைவில் வந்து இடறிற்று கௌசல்யாவிற்கு.

❍ ❍ ❍

தூக்கம் கலைந்து தவித்த கருணாகரன், ஆத்திரத்தோடு எழுந்து வந்து “ப..டார்...” என்று ஓசையெழக் கதவைத் திறந்து கொண்டு ஹாலுக்கு வந்தான்.

இப்படி ஒரு சத்தத்தை எதிர்பார்க்காத மகேஷ் ரெய்ம் படிப்பதை நிறுத்திவிட்டு முகம் வெளிர விழித்தான்.

என்னவோ ஏதோ.. என்றுப் பதறி அடித்துக் கொண்டு, அடுப்பை நிறுத்திவிட்டு சமையலறையிலிருந்து கூடத்துக்குப் பாய்ந்தோடி வந்தாள் கௌசல்யா.

முகத்தில் ரௌத்ரம் அப்பியிருக்க, “Falling Down.. Falling Down..”னு இது என்னடா காலங்கார்த்தால.. எதிர்மறையாக் கூச்சல் போட்டுக்கிட்டு.” என்று கத்தியபடியே மகேஷ் கையில் வைத்திருந்த ரெய்ம்ஸ் புத்தகத்தைப் பிடுங்கி வீசி எறிந்தான்.

புத்தகத்தைப் பிடுங்கி வீசுவதற்கு முன் சென்றிருந்தால், அதைத் தடுத்திருக்கலாம். பிடுங்கி வீசியபின் எதிர் வார்த்தையாடல் எந்த வகையிலும் பயன் தராது’ என்று கருதினாளோ என்னவோ.. கௌசல்யா, முரட்டுத்துத் தனமாய் நடந்கொண்ட கணவனின் செயல்களைக் கண்டும், எதிர் வினை ஏதும் ஆற்றவில்லை.

ஆத்திரத்தை வார்த்தைகளால் புனைந்துக் கொட்டிவிட்டு, மீண்டும் கதவை அடைத்துக் கொண்டுப் படுத்தான் கருணாகரன்.

கண் உறுத்தலோடு, குற்ற உணர்வும் இணைந்து, இப்போது முழுவதுமாய்த் தூக்கம் கலைந்திருந்தது கருணாகரனுக்கு.

❍ ❍ ❍

கவிழ்ந்து கிடந்த புத்தகத்தைக் குனிந்து எடுத்துக் கொண்டு வந்து, அப்பாவின் திடீர் கத்தலாலும், செயலாலும், கலங்கி அமர்ந்திருந்த மகன் மகேஷ் அருகில் சென்றாள் கௌசல்யா.

“அம்மா...”

“ம்...”

“இந்த ரெய்ம் எதிர்மறையாம்மா..”

“எதிர் மறை இல்லடாக் கண்ணா... *If* க்ளாஸ்’னு சொல்லுவாங்க... இப்படியெல்லாம் இருந்தா, இப்படி ஆயிடும்னு பொருள் பட உபயோகிக்கற முறை அது.”

“புரியலைம்மா... “

“நான் சொல்றதை கதை மாதிரி கேட்டுக்கோ.. புரியற வயசு வரும்போது புரியும்.

காஞ்சி மகா பெரியவரிடம் ஒருவர் “ஆறேழு வயசுலயே கொண்டு போய் குழந்தைகளைப் பாடசாலைல

சேர்த்து ஐந்து வருஷ காலம் வேத அத்யயனம் செய்யச் சொல்றேளே... வேதத்துல உள்ள சூட்சுமங்கள் எல்லாம் அந்தக் குழந்தைகளுக்கு எப்படிப் புரியம்."

அந்த வயசுல மனனம் பண்ணி வெச்சிட்டா, புரியற வயசு வரும்போது சூட்சுமம் புரிஞ்சிடும்.. என்றாராம் பெரியவர்..

அது போல இருந்தது கௌசல்யா சொன்னது.

❍ ❍ ❍

**தூ**க்கம் வராமல் புரண்டுப் புரண்டுப் படுத்துக் கொண்டிருந்தவனின் காதுகளில் ஹாலில் அம்மாவுக்கும் மகனுக்கும் நடைபெற்ற உரையாடல்கள் காதில் விழுந்தன.

"'மெல்லத் தமிழ் இனி சாகும்..'' னு பாரதியாரே சொல்லிட்டார்..னு அந்த ஒரு சொற்றொடரை வெச்சிக்கிட்டுப் பேசுவாங்க. கேக்கறவங்களுக்கு 'ஏன் இப்படி பாரதியார் சொன்னார்..?' னு கூடத் தோணும்.

பாரதியார் என்ன சொன்னார் தெரியுமோ..?

புத்தம் புதிய கலைகள் – பஞ்ச

பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்

மெத்த வளருது மேற்கே – அந்த

மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவ தில்லை – அவை

சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை

மெல்லத் தமிழினிச் சாகும் –

அந்த மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான் – ஆ

இந்த வசையெனக் கெய்திடலாமோ

சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்

செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.

இப்படிப் பாடினார் பாரதியார்..

கிணத்துத் தவளையா இல்லாம, பரந்த மனசோட இருக்கணும்.. அப்பத்தான் தமிழ் மொழி மேலே மேலே உயரும்னு சொல்ல வந்தார் பாரதியார்.

அதே போலத்தான்.. டி எஸ் இலியட் என்ற இலக்கிய கர்த்தா, இந்த நர்ஸரி ரெய்மை களர் நிலம்ங்கற நோபல் பரிசு வாங்கின கவிதைல ஒரு குறியீடாப் பயன்படுத்தறார்,

❍ ❍ ❍

"*Da Datta.,,!*

*Da Davadhvam...!!*

*Da Damyata ...!!!*

இந்த மூன்று இந்திய உபநிடதங்களோட சாரத்தையும் சொல்றேன் கேட்டுக்கோ..;

*Da Datta.,,!* ன்னா, வட மொழில 'தத்தம்'னு அர்த்தம். அதாவது கொடுத்தல். நம்மகிட்டே எது இருந்தாலும் அதுல ஒரு பகுதியை மத்தவர்களுக்குக் கொடுக்கறது. இறைக்கற கேணிதான் ஊறும்னு சொல்லுவாங்க. அது போல கொடுக்கக் கொடுக்கத்தான் வளரும்;

*Da Davadhvam...!!* ன்னா, 'இரக்கப்படுதல்'னு வடமொழி அர்த்தம். அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுதல்'னு அர்த்தம். விட்டுக் கொடுத்தவன் கெட்டுப்போவதில்லைனு சொல்வாங்க;

*Da Damyata ...!!!* சுயக் கட்டுப்பாடுங்கறதுதான் இந்த வட மொழிப் பதத்துக்குப் பொருள்;

கொடுக்கறதானாலும், இரக்கப்படறதானாலும், சுயப் கட்டுப்பாட்டோடச் செய்யணும். தனக்கு மிஞ்சித்தான் தானமும் தர்மமும்னு சொல்வாங்கதானே.. அதைத்தான் உபநிஷதம் *Da Damyata ...!!!* ன்னு சொல்லுது;

உபநிஷத்துகளின் சாரமான இந்த மூணும் இங்கிலாந்துல இறங்கினா, இங்கிலாந்தோட உலக நாடுகளின் உறவுப் பாலம் நிலைத்து நிற்கும். இல்லேன்னா *London Bridge* னு அவர் சொல்ற உறவுப் பாலம் *Falling Down! Falling Down!! Falling Down!!* னு மூணு முறை சொல்றார்;

இந்த ரெய்ம் ஒரு *IF Clause* ரெய்ம். நெகடிவ் இல்லே. அப்பா நைட் டூட்டி முடிஞ்சி வந்து தூங்கறாங்க. அதனால சத்தம் போட்டுப் பலமாப் படிக்காம அமைதியா சைலண்ட் ரீடிங் பண்ணு மகேஷ்." என்றாள் கௌசல்யா.

❍ ❍ ❍

மகன் சத்தம் போட்டுப் படிக்காமல் அமைதியாகப் படித்த காரணத்தாலோ;

ஆங்கில இலக்கியத்தில் கரை கண்ட தன் மனைவி கௌசல்யா சொன்ன விளக்கங்களாலோ..;

அல்லது இரண்டின் விளைவுகளாலோ உண்மைகளை உணர்ந்தபின் உட்புழுக்கம் குளிர்ந்து, மெதுவாகக் கண் அசந்தான் கருணாகரன்.